Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

FRIDAY, APRIL 21, 2023

வெள்ளிக்கிழமை ஏப்ரல் 21, 2023 | ஒளி: 08 கதிர்: 254 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# கிலோவில் முட்டை



நுகர்வோர் விவகார அதிகார சபை சட்டத்தின் கீழ், வியாழக்கிழமை (20) முதல் அமலாகும் வகையில் ஒரு கிலோ கிராம் முட்டைக்கான அதிகபட்ச சில்லறை விலையினை நிர்ணயித்து அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ கிராம் வெள்ளை நிற முட்டை 880 ரூபாயாகவும், ஒரு கிலோ கிராம் சிவப்பு நிற முட்டை 920 ரூபாயாகவும் அதிகபட்ச சில்லறை விலைகளாக நிர்ணயித்து வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை, வெள்ளை நிற முட்டை ஒன்று 44 ரூபாய் மற்றும் சிவப்பு முட்டை ஒன்று 46 ரூபாய் என்ற அதிகபட்ச சில்லறை விலைக்கும் விற்பனை செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிர்ணய விலைக்கு மேல் விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக நுகர்வோர் விவகார அதிகார சபை, சட்டத்தின் அடிப்படையில் கடுமையான தொடர்ச்சி P2

## நாட்டின் மின்சக்தி தேவை கடுமையாக அதிகரித்தது

**அனைத்து அனல் மின் நிலையங்களும் மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும்**




சமீப காலத்தில் பதியப்பட்ட அதிக மின்சக்தி தேவையாக 49.53 ஜிகாவோட், புதன்கிழமை (19) பதிவாகியதாகவும் இது வியாழக்கிழமை (20), 50 ஜிகாவோட்டைத் தாண்டும் என்று தாம் கணிப்பதாகவும் மின்சாரம் மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

டுவிட்டரில் வியாழக்கிழமை (20) வெளியிட்ட பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அமைச்சர் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

## பாக்கு நீரிணையை தாண்டிய பந்தயப் புறா

**தனுஷ்கோடி அருகே தஞ்சம்**

எம்.இஸட். ஷாஜஹான்



யாழ். வல்வெட்டித் துறையில் நடைபெற்ற புறா பந்தயத்தில் கலந்து கொண்ட புறா, வழி மாறி தனுஷ்கோடியை வந்தடைந்தாக பாதுகாப்பு துறை வட்டார அதிகாரிகள் நடத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது. தொடர்ச்சி P2

## மூன்று நாள்களுக்கு ஐஎம்எப் விவாதம்




சர்வதேச நாணய நிதியத்தின் விரிவாக்கப்பட்ட நிதி வசதி தொடர்பான ஒப்பந்தம் குறித்த பாராளுமன்ற விவாதத்தை மூன்று நாள்கள் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் வியாழன் (20) முற்பகல் 11.00 மணிக்கு நடைபெற்ற கட்சித்தலைவர்கள் தொடர்ச்சி P2

## அக்குறணை சம்பவத்துக்கும் ATAக்கும் தொடர்பு உள்ளதா?


**இம்ரான் எம். பி கேள்வி**

ஹஸ்பர்



அக்குறணை சம்பவத்துக்கும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்துக்கும் (ATA) தொடர்புகள் உள்ளதா என்று திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் சந்தேகம் வெளியிட்டார்.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு வியாழக்கிழமை (20) கருத்து வெளியிடும் போதே மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவித்ததாவது, தொடர்ச்சி P2



## முதலாவது 'ஹைபிரிட்' சூரிய கிரகணம்

இந்த ஆண்டின் முதலாவது சூரிய கிரகணம் வியாழக்கிழமை (20) தோன்றியது. இலங்கையில் அது தென்படவில்லை. எனினும், சிங்கபூர் மற்றும் மலேசியாவில் தென்பட்டுள்ளது.

இது 'நிங்கலூ' சூரிய கிரகணம் அல்லது 'ஹைபிரிட்' சூரிய கிரகணம் என்று வானியல் அறிஞர்களால் அழைக்கப்படுகின்றது. தொடர்ச்சி P2

கல்வியை அத்தியாவசிய சேவையாக்கும் தீர்மானம்

## ஜனாதிபதியின் அடக்குமுறை

**ஜனாதிபதிக்கு சவால் விடுவோம் என்கிறது ஆசிரியர் சங்கம்**

**கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் நிலை ஜனாதிபதிக்கு இருந்தால், அதில் உள்ள குறைகளையும் நிவர்த்தி செய்திருக்க வேண்டும்**



கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் ஜனாதிபதியின் தீர்மானத்தை அடக்குமுறை நடவடிக்கையாகவே பார்க்க முடியும் என்று தெரிவித்த இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின், ஆசிரியர்களை அச்சுறுத்த ஜனாதிபதிக்கு எவ்வித அதிகாரமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கு ஜனாதிபதி சவால் விடுத்தால், அவருக்கு மீண்டும் சவாலை விடுக்க ஆசிரியர் சங்கங்கள் தயங்காது என்றும் குறிப்பிட்டார்.

கொழும்பில் வியாழக்கிழமை (20) ஊடகங்களிடம் பேசிய போதே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் குறிப்பிட்டார்.

பரீட்சைகளை கட்டாய சேவையாக்கவோ, அவசரகாலத்தின் கீழ் பரீட்சை குழுவை அமைக்கவோ, விடைத்தாள் திருத்தும் பணியில் இருந்து விலகும் ஆசிரியர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவோ அல்லது அவர்களது சொத்துகளை அபகரிக்கவோ ஜனாதிபதிக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றும் குறிப்பிட்டார். தொடர்ச்சி P2

விடைத்தாள் மதிப்பிடும் விவகாரம்

## பரீட்சை பணிகளை அத்தியாவசிய சேவையாக்க ஜனாதிபதி பணிப்பு

**மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை**

**கடந்த வருடம் பணி புரிந்தவர்களைக் கொண்டு இம்முறை திருத்தும் பணி**

**அறிவித்த விடயங்களை அமைச்சர் அவதானித்து, நடவடிக்கைகளை முன்னெடுக்கவும்**



பரீட்சைகள் தொடர்பிலான பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தத் தேவையான பணிகளை முன்னெடுக்குமாறும் கல்வி துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உயர்தர பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளுக்கான மாற்று யோசனைகள் மற்றும் உரிய வேலைத்திட்டங்களை இவ்வார இறுதிக்குள் அறிவிக்குமாறு அறிவுறுத்தினார்.

எந்தவொரு குழுவினரும் பாடசாலை மாணவர்களை பணயக் கைதிகளாக பயன்படுத்த இடமளிக்கபோவதில்லை என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். தொடர்ச்சி P2

## வெடிபொருட்களின் உரிமக் கட்டணம் உயர்வு

**வெடி பொருட்களை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்குமான அனுமதிக் கட்டணம் இரண்டாயிரம் ரூபாயால் உயர்வு**

வெடிபொருள் உற்பத்தியாளர்கள், விநியோஸ்தர்கள் மற்றும் இறக்குமதியாளர்களுக்கு அனுமதிப் பத்திரம் மற்றும் உரிமம் வழங்க விதிக்கப்படும் கட்டணம் மே 1ஆம் திகதி முதல் அமலுக்கு வரும் வகையில் திருத்தப்படவுள்ளது.

1956 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க வெடிபொருட்கள் கட்டளைச் சட்டத்தின் 33 ஆவது பிரிவின் கீழ் தனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைய பாதுகாப்பு அமைச்சர் என்ற ரீதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார்.

இதன்படி, கல் வெடி மருந்து உற்பத்திக்கு மட்டும் 2 ஆயிரம் ரூபாயாக இருந்த உரிமக் கட்டணம் 4 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தொடர்ச்சி P2

கட்டாரில் வேலைவாய்ப்பு தருவதாக

## நிதி மோசடியில் ஈடுபட்ட பெண்களை தேடி வலை

**சந்கேக நபர்களின் வங்கிக் கணக்கில் முறைப்பாட்டாளர் பணத்தை வைப்பிலிட்டுள்ளதுடன், கடவுச்சீட்டையும் வழங்கியுள்ளார்**

கட்டாரில் வேலைவாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபட்ட இரு பெண்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

31 வயதுடைய ஊர்காவற்றுறை பிரதேசத்தைச் சேர்ந்த குறித்த இரண்டு பெண்களும் 6 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்துள்ளதாக முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ளது.

முறைப்பாட்டாளர் பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்கேகநபர்களின் வங்கிக் கணக்கில் பணத்தை வைப்பிலிட்டுள்ளதுடன், கடவுச்சீட்டையும் சந்தேகநபர்களிடம் வழங்கியுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## அடுத்தவாரம் கட்சி தாவல்கள் அரங்கேறும்

தமிழ், சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில், எதிர்க்கட்சியில் இருந்து மற்றுமொரு குழு அரசாங்கத்துடன் இணையவுள்ளது.

புத்தாண்டுக்குப் பின்னர் முதல் தடவையாக அடுத்த வாரம் பாராளுமன்றம் கூடும் போது கட்சித்தாவல்கள் அம்பலமாகும் என்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

கட்சி தாவுபவர்களுக்கு அமைச்சுப் பதவிகள் வழங்கப்பட வேண்டிய அவசியமில்லை என்றும் சிலருக்கு அமைச்சர் பதவிகள் மற்றும் குழுத் தலைவர் பதவிகள் தொடர்ச்சி P2

2023இல் 6 ஆம் தரத்துக்காக

## பாடசாலைகளில் சேர விண்ணப்பிக்கலாம்

**https://g6application.moe.gov.lk/#/ முகவரியில் விண்ணப்பம் கிடைக்கும்**

2022 ஆம் ஆண்டு 5 ஆம் தர புலமைப்பரிசில் பெறுபேறுகளின் அடிப்படையில், 2023 ஆம் ஆண்டில் 6 ஆம் தரத்துக்காக பாடசாலைகளில் சேர்வதற்கான விண்ணப்பங்கள் இணையம் மூலம் சமர்ப்பிக்க முடியும் என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி வியாழக்கிழமை (20) நண்பகல் 12 மணி முதல் மே மாதம் 8ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணி வரை விண்ணப்பிக்க முடியும் என்றும் இணையதள தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘கிலோ’வில் முட்டை

நடவடிக்கை எடுக்கப்படும் என குறித்த விசேட வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, கிலோகிராமில் முட்டை விற்பனைச் செய்யப்படும் முறைமையானது சாத்தியமற்ற முறைமையாகும் என ஹட்டன் நுகர்வோர் தெரிவித்துள்ளனர்.

தற்போது சிவப்பு முட்டை ஒன்று 56 ரூபாய்க்கும் வெள்ளை முட்டை ஒன்று 54 ரூபாய்க்கும் விற்பனைச் செய்யப்படுகின்றது. ஒரு கிலோ கிராம் முட்டையை நிறுத்து பார்த்தால் 15 முட்டைகள் அதில் அடங்குகின்றன. அதனடிப்படையில் வெள்ளை முட்டை ஒன்றின் விலை 58 ரூபாய் 60 சதமாகுமென முட்டை விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

முட்டையை கிலோ கிராமில் நிறுத்து விற்பனைச் செய்தால், நிர்ணய விலைக்கும் கூடிய விலையாகிறது. ஆகையால் முட்டையை கிலோ கிராமில் விற்பனைச் செய்யும் முறைமையானது சாதாரண முறைமையல்ல என்று முட்டை விற்பனையாளர்களும் நுகர்வோரும் தெரிவித்துள்ளனர்.

## வெடிபொருட்களின் உரிமக் கட்டணம் உயர்வு

பாதுகாப்பு சேவை நூல் தயாரிப்புக்கான உரிமக் கட்டணம் 4 ஆயிரம் ரூபாயிலிருந்து 7 ஆயிரம் ரூபாயாகவும், கல் வெடி மருந்து மற்றும் பாதுகாப்பு சேவை நூல் தயாரிப்புக்கான உரிமக் கட்டணம் 7 ஆயிரம் ரூபாயிலிருந்து 10 ஆயிரம் ரூபாவாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும், வெடி பொருட்களை இறக்குமதி செய்பவர்களின் வணிகத்துக்கான உரிமக் கட்டணம் மற்றும் வெடிபொருள் விநியோகஸ்தர்களின் வணிகத்துக்கான உரிமக் கட்டணமும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

வெடி பொருட்களை வைத்திருப்பதற்கும் பயன்படுத்துவதற்குமான அனுமதிக் கட்டணத்தை 2 ஆயிரம் ரூபாயாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அக்குறணை சம்பவத்துக்கும் ATAக்கும் தொடர்பு உள்ளதா?

“இலங்கை வாழ் முஸ்லிம்கள் புனித ரமழான் மாதத்தின் 27ஆம் நாள் இரவில் புனித லைலத்துல் கத்ர் இரவை எதிர்பார்த்து தமது வணக்க வழிபாடுகளை முன்னெடுக்க முனைந்த நேரத்தில் அக்குறணை பகுதி பள்ளிவாயலுக்கு வெடிகுண்டு மிரட்டல் விடுக்கப்பட்டதாக வந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

பொலிஸாருக்கு வந்த அநாமதேய அழைப்பின் அடியாக இவ்வாறான பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டதாக தெரிகிறது. பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில்கொண்டு உடனடியாக செயல்பட்ட பாதுகாப்பு தரப்புக்கு நாம் நன்றியை தெரிவிக்கின்றோம்.

அதே நேரம் ஒரே ஒரு அநாமதேய அழைப்பு அல்லது அநாமதேய கடிதம் எந்தவொரு சமூகத்தின் விஷேட நிகழ்வுகளையும் சீர்குலைக்கும் நிலைமையை நாம் அனுமதிக்கவும் கூடாது.

இதே நிலைமை நாளை ஒரு பெரஹெர நிகழ்வுக்கோ அல்லது வேறு சமய நிகழ்வுக்கோ நடக்க நேர்ந்தால் அந்த நிகழ்வுகளை நிறுத்துவது ஒருபோதும் தீர்வாக மாட்டாது.

வலி நிறைந்த ஈஸ்டர் தாக்குதல் நினைவை மீட்டும் நாட்களில் இப்படியான மன உளைச்சலுக்குரிய நிகழ்வுகள் நடப்பது பலத்த சந்தேகத்தை தருவதும் தவிர்க்க முடியாதது. ஈஸ்டர் தாக்குதலின் பின்னால் பாரிய அரசியல் பின்னணிகொண்ட சதி இருந்ததாக இன, மத வேறுபாடின்றி மிகப்பெரும்பாலான இலங்கை மக்கள் நம்புகின்றனர்.

அக்குறணை சம்பவத்தின் பின்னணியில் அச்சப்படும் படியாக ஏதுமில்லை என்று அரச தரப்பு அமைச்சர்கள் கூறினாலும் கூட இந்த சலசலப்பும் அதிர்வலையும் உருவாக வேண்டுமென்ற நோக்கம் இதன்பின்னணியில் உள்ளதா என்ற கேள்வி எம்மிடம் எழுவது இயல்பானதே.

ஒரு சமூகத்தின் சந்தோஷத்தை சீர்குலைக்கும் விஷமத்தனம் இதன் பின்னால் உள்ளதா? அல்லது ஜனநாயக விரோதமான கொடுங்கோன்மை சட்டமான ATA எனும் உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் கொண்டுவரப்பட அரசு தயாராகும் நிலையில் அதற்கு தோதான சமூக நிலைமையை கட்டமைக்கும் கைங்கர்யம் இதன் பின்னணியில் உள்ளதா? என்ற சந்தேகம் பலமாக மக்கள் மத்தியில் எழுந்துள்ளதை ஒரு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் என்னிடம் இன்று மட்டுமே மக்களிடமிருந்து வந்த கேள்விகளில் இருந்து புரிந்துகொள்ள முடிகிறது.

எனவே இன, மத வேறுபாடின்றி எல்லா மக்களதும் பாதுகாப்பை உறுதிசெய்வதும் இதன் பின்னணியில் ஈஸ்டர் தாக்குதல் போன்ற சதிகள் இருந்தால் அவற்றை முறியடிப்பதும் அவ்வாறின்றி விஷமத்தனமான பொறுப்பற்ற நடவடிக்கைகள் காணப்பட்டால் கடுமையான நடவடிக்கைகளை அவற்றுக்கெதிராக எடுப்பதும் அரசாங்கத்தின் முன்னுள்ள முதன்மை பொறுப்புகளாகும்” என்றார்.

## ஜனாதிபதியின் அடக்குமுறை

நாட்டின் பொருளாதாரம் எரிபொருளின்றி வீழ்ச்சியடைந்துள்ளது என்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பரீட்சைகள் தாமதமாதாகவும் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் விநியோகிக்கப்படவில்லை என்றும் பாடசாலை சீருடைகள் முறையாக விநியோகிக்கப்படவில்லை என்றும் தெரிவித்த அவர், கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் நிலை ஜனாதிபதிக்கு இருந்தால் மேற்கண்ட குறைபாடுகளையும் பூர்த்தி செய்திருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

கல்வியை அத்தியாவசிய சேவையாக மாற்றும் ஜனாதிபதியின் தீர்மானத்தை அடக்குமுறை நடவடிக்கையாகவே பார்க்க முடியும் என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்த ஆசிரியர்களின் பிரச்னையை கலந்துரையாடல் மூலம் தீர்க்காமல் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், பல்கலைக்கழக பேராசிரியரை அச்சுறுத்திய ஜனாதிபதி, இவற்றைச் செய்வதால், ஜனாதிபதி இந்த மக்களை அச்சுறுத்த முயற்சிக்கின்றாரா என்ற சந்தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது என்றார்.

விடைத்தாள் திருத்தும் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு 3 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கான அமைச்சரவை பத்திரத்தை கல்வி அமைச்சர் சமர்ப்பித்துள்ள போதும் அது இரண்டு மாதங்களாக திறைசேரியால் இழுத்தடிக்கப்படுகிறது என குறிப்பிட்டார்.

இந்த மதிப்பீட்டு செயல்முறை தாமதமானால், அதற்கு அரசாங்கமே காரணம் என்று தெரிவித்த அவர், பிள்ளைகளின் உயிருடன் விளையாடி தங்கள் மீது பழி சுமத்துகின்றனர் என்றார்.

## பரீட்சை பணிகளை அத்தியாவசிய சேவையாக்க ஜனாதிபதி பணிப்பு

கல்வி மற்றும் உயர்கல்வி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்களின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட யோசனைகள் தொடர்பிலான பகுப்பாய்வுக் கூட்டம் ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (19) நடைபெற்ற போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பரீட்சைப் பணிகளை அத்தியாவசிய செயற்பாடுகளாக முன்னெடுத்துச் செல்வதற்கு அவசியான சட்ட ஏற்பாடுகளை ஏற்படுத்த எதிர்பார்த்துள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, கடந்த வருடம் பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகளில் ஈடுபட்ட குழுவினரை, கொண்டு இம்முறை விடைத் தாள்களைத் திருத்தும் பணிகளை முன்னெடுக்குமாறும் பணிப்புரை விடுத்தார்.

பரீட்சைகள் தொடர்பிலான பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனப்படுத்தத் தேவையான பணிகளை முன்னெடுக்குமாறு கல்வி துறைசார் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

இப்பணிகளில் ஈடுபட மறுப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்தாலோசிக்க உள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கல்வி அமைச்சர் இது தொடர்பில் அறிவித்துள்ள விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்து அதற்குரிய அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் கல்வித் துறைசார் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி வலியுறுத்தினார்.

கல்வி மற்றும் உயர்கல்வி, தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்களின் 2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட விசேட யோசனைகளின் முன்னேற்றங்கள் குறித்தும் இதன்போது பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

க.பொ.த உயர்தர பரீட்சையில் அதிக மதிப்பெண்களை பெற்றுக்கொள்ளும் மாணவர்களில் குறைந்தபட்சம் வருடத்திற்கு நால்வரையேனும் ஒக்ஸ்போர்ட், கேம்பிரிஜ் மற்றும் ஹார்வட் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைப்பதற்கான வேலைத்திட்டம் ஒன்றைத் தயாரிப்பது தொடர்பில் ஆலோசனைகளை வழங்கிய ஜனாதிபதி, வருடாந்தம் மாணவர் எண்ணிக்கையில் அதிகரிப்பை ஏற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் அறிவுறுத்தினார்.

அரச பல்கலைக்கழகங்களைப் போன்றே தனியார் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அவ்வாறான வாய்ப்புக்களைப் பெற்றுக்கொடுக்கும் அதேநேரம், தொழில்நுட்ப கல்வியில் மாணவர்களை அதிகளவில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

> **“ அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 350இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி கல்லூரிகளை ஒன்றிணைத்து வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்**

உயர் கல்வி மற்றும் சாதாரண தர கல்வி வசதிகள் கொண்ட சகல பாடசாலைகளுக்கு, இணைய வசதிகளை பெற்றுக்கொடுப்பதற்கான வேலைத்திட்டமொன்றை முன்மொழியுமாறு தொலைத்தொடர்புகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

அதேபோல் வருடாந்தம் 10,000 பொறியியல் பட்டதாரிகளையும் 5,000 மருத்துவ பட்டதாரிகளையும் உருவாக்குவதற்கான வேலைத்திட்டமொன்றை அரசாங்க மற்றும் தனியார் பல்கலைக்கழகங்கள் இணைந்து முன்னெடுக்க வேண்டும் என வலியுறுத்திய ஜனாதிபதி அதற்குரிய குழுவொன்றை நியமித்து அறிக்கையொன்றை சமர்பிக்குமாறும் அறிவுறுத்தினார்.

மேலும் அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் 350இற்கும் மேற்பட்ட தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி கல்லூரிகளை ஒன்றிணைத்து வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுப்பதன் அவசியத்தையும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

நடைமுறையிலிருக்கும் தொழிலாளர் சட்டம் தொழிலாளர்களுக்கு அவசியமான பல்வேறு மூலங்களை கொண்டுள்ளதால், அதற்கு மாறான தனிப்பட்ட தொழில்முறைச் சட்டம் ஒன்றை உருவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அதற்கு அவசியமான சட்டமூலத்தை மே மாதத்திற்குள் சமர்பிக்குமாறு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சின் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லாவினால் ஆரம்பிக்கப்பட்ட கிழக்கு தனியார் பல்கலைக்கழகம் தொடர்பில் ஆராய்வதற்கு இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொலவின் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள உப குழுவின் நடவடிக்கைள் குறித்தும் இங்கு ஆராயப்பட்டது.

## நாட்டின் மின்சக்தி தேவை கடுமையாக அதிகரித்தது

ஹம்பாந்தோட்டையில் அண்மையில் நிறுவப்பட்ட டீசல் மின்பிறப்பாக்கிகள் உட்பட இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான அனைத்து அனல் மின் நிலையங்களும் மின்சார உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

## முதலாவது ஹைபிரிட் சூரிய கிரகணம்

சூரியன், பூமி, சந்திரன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும் நிகழ்வு ‘சூரிய கிரகணம்’ என அழைக்கப்படுகின்றது.

சூரியனை முழுமையாக நிலவு மறைத்தால் அது ‘முழு சூரிய கிரகணம்’ எனவும் ஒரு பகுதியை மட்டும் மறைத்தால் அது ‘பகுதி சூரிய கிரகணம்’ எனவும் குறிப்பிடப்படுகிறது.

இந்த ‘ஹைபிரிட் சூரிய கிரகணம்’ ஓர் அரிய கிரகண நிகழ்வு என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த ஹைபிரிட் சூரிய கிரகணமானது, வியாழன் (20) காலை 7.04 முதல் நண்பகல் 12.29 வரை நிகழ்ந்ததாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் வானியல் மற்றும் விண்வெளி ஆய்வுப்பிரிவின் பணிப்பாளர், பேராசிரியர் சந்தன ஜயரத்ன குறிப்பிட்டுள்ளார்.

## பாடசாலைகளில் சேர விண்ணப்பிக்கலாம்

விண்ணப்பங்கள் https://g6application.moe.gov.lk/#/ என்ற முகவரியில் பெறலாம்.

www.moe.gov.lk என்ற இணையத்தளத்துக்குச் சென்று பாடசாலை விண்ணப்பம் தொடர்பான பாடசாலை கணக்கெடுப்பு எண் (சென்சஸ் எண்) கொண்ட ஆவணத்தைப் பெறலாம் என்றும் அமைச்சு அறிவித்துள்ளது.

## அடுத்தவாரம் கட்சி தாவல்கள் அரங்கேறும்

கிடைக்கலாம் என்றும் குறிப்பிட்டார். நாட்டின் இக்கட்டான நேரத்தில் அரசாங்கத்துக்கு ஆதரவளிக்க அவர்கள் எதிர் பார்க்கின்றனர் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துக்கு ஆதரவளிப்பது வரவேற்கத்தக்கது என்று குறிப்பிட்ட அவர், இது ஒரு குறிப்பிட்ட கட்சியை ஆதரிப்பது அல்ல என்றும் இந்த முக்கியமான தருணத்தில் நாட்டை ஆதரிப்பது என்றும் குறிப்பிட்டார்.

## மூன்று நாட்களுக்கு ஐஎம்எப் விவாதம்

கூட்டத்தின்போது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 முதல் 28 வரை பராளுமன்றம் கூடவுள்ளதுடன், எதிர்வரும் 26, 27 மற்றும் 28ஆம் திகதிகளில் இந்த பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

அத்துடன், குறித்த விவாதத்தின் மீதான வாக்கெடுப்பை எதிர்வரும் 28 ஆம் திகதி நடத்துவதற்கும் கட்சித்தலைவர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பாக்கு நீரிணையை தாண்டிய பந்தயப் புறா

ராமநாதபுரம் மாவட்டம் ராமேஸ்வரம் புலித்தேவன் நகரில் உள்ள நகரை சேர்ந்தவர் அரச குமார். இவர் கடந்த 16ஆம் திகதி தனுஷ்கோடியிலிருந்து நாட்டுப்படகில் மீன் பிடிக்க கடலுக்கு சென்றார்.

தனுஷ்கோடியில் இருந்து ஏழு கடல்மைல் தூரத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது காலில் பிளாஸ்டிக் கட்டிய புறா ஒன்று அவரது நாட்டுப்படகில் தஞ்சமடைந்துள்ளது.

புறா காலில் கட்டியிருந்த பிளாஸ்டிக்கில் சில எண்கள் குறிப்பிட்டபட்டு இருந்ததுடன் ஆங்கிலத்தில் எழுதி இருந்ததால் அச்சம்மடைந்த அரசகுமார், அந்த புறாவை ராமேஸ்வரம் துறைமுக காவல் நிலையத்தில் ஒப்படைத்தார்.

இதையடுத்து அந்த புறாவின் காலில் உள்ள பிளாஸ்டிக்கில் இலங்கை தொலைபேசி எண் இருந்ததால் அந்த எண்ணுக்கு மாநில உளவுத்துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு விசாரித்தனர்.

அப்போது அந்த புறா, இலங்கை யாழ்ப்பாணம் மாவட்டம் வல்வெட்டித்துறையை சேர்ந்த சுதன் என்பவருக்கு சொந்தமானது என்று முதல் கட்ட விசாரணையில் தெரிய வந்தது.

புத்தாண்டையொட்டி கடந்த 15ஆம் திகதி மாலை யாழ்பபாணம் வல்வெட்டித்துறையில் புறா பந்தயம் நடத்தப்பட்டதாகவும், இந்த பந்தயத்தில் சுதனுக்கு சொந்தமான 28 பந்தய புறாக்கள் பந்தயத்தில் கலந்து கொண்டதாகவும், அதில் 20 புறாக்கள் மட்டும் திரும்பிய நிலையில் எட்டு புறாக்கள் காணாமல் போனதாகவும் உளவுத்துறை அதிகாரிகள் நடத்திய விசாரணையில் சுதன் தெரிவித்துள்ளார்.

உளவுத்துறை அதிகாரிகள் புறாவின் புகைப்படத்தை வாட்ஸ்ஆப்பில் சுதனுக்கு அனுப்பிய நிலையில் அதைப் பார்த்த சுதன் பந்தயத்தில் காணாமல் போன எட்டு புறாக்களில் இதுவும் ஒன்று என உறுதி செய்தார்.

இதையடுத்து ராமேஸ்வரம் துறைமுகம் காவல் நிலையத்துக்கு உட்பட்ட மருதுபாண்டியர் நகரில் வசித்து வரும் ரகு என்பவர் தனது வீட்டில் புறா வளர்த்து வருவதால் அந்த புறா கூண்டில் இந்த புறாவையும் வைத்து வளர்க்கும் படி போலீசார் அவரிடம் ஒப்படைத்தனர்.

# குரங்குகள் ஏற்றுமதி குருட்டுத்தனமான முடிவு

## தமிழ்த் தேசிய பசுமை இயக்கம் சாடல்

நிதர்சன் விநோத்

இலங்கையில் இருந்து ஒரு இலட்சம் செங்குரங்குகளைச் சீனாவின் மிருகக்காட்சிச்சாலைகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு தீர்மானித்திருப்பதாக விவசாய அமைச்சு தெரிவித்ததை அடுத்து, பலத்த வாதப்பிரதிவாதங்கள் ஏற்பட்டுள்ளன. இம்முடிவு குருட்டுத்தனமானதும் சூழலுக்கு விரோதமானதும் நடைமுறைச் சாத்தியம் இல்லாததும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் சாடியுள்ளார்.



இலங்கையில் இருந்து சீனாவுக்குக் குரங்குகளை ஏற்றுமதி செய்வது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கையில் அவர் மேலும் குறிப்பிடுகையில்;

அழிந்துவரும் காட்டுயிரிகளின் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தும் சர்வதேச உடன்படிக்கையைச் சீனா ஏற்றுக் கொண்டிருப்பதால் குரங்குகளின் இறக்குமதிக்கு அனுமதி இல்லை என்று சீனத் தூதுவராலயம் தெரிவித்திருக்கிறது. ஆனால், சட்டபூர்வமான அனுமதி இல்லாத நிலையிலும் குரங்குகள் உட்பட அழிந்துவரும் பல காட்டுயிரிகளின் மிகப்பெரும் கறுப்புச் சந்தையாக இன்றளவும் சீனாவே இயங்கி வருகிறது. சீன உணவகங்களிலும் சீன ஆய்வகங்களிலும் குரங்குகளுக்கான தட்டுப்பாடு எப்போதுமே நிலவுகிறது. இதனை ஈடுகட்டவே, ஜீவகாருண்யர்களின் தண்டனைகளில் இருந்து தப்பவே மிருகக்காட்சிச்சாலைக்கு என்ற பெயரில் குரங்குகளின் வர்த்தகத்துக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

குரங்குகள் தமது உணவு முறையால், காட்டுவெளி எங்கும் விதைகளைத் தூவி, மரங்களை இயற்கையாகவே நடவு செய்கின்றன. இதனால், காடுகளின் கட்டுமானத்தில் மையக்கல் இனங்களாகக் கருதப்படும் இக்குரங்குகள் அழிந்தால் காட்டுப் பரப்பளவு சுருங்கி, இயற்கைச்சூழலின் சமநிலை குலையும். காபன் உறிஞ்சிகளான காடுகள் சுருங்குவதால் பாதகமான காலநிலை மாற்றங்கள் விரைவுபடுத்தப்பட்டு விவசாயமும் வீழ்ச்சியுறும்.

செங்குரங்குகள் இலங்கைக்கு மட்டுமே உரித்தான ஓர் உள்நாட்டு இனம். இதனைச் சர்வதேச இயற்கை பாதுகாப்பு ஒன்றியம், அழிவை எதிர்நோக்கியுள்ள விலங்குகளில் ஒன்றாகப் பட்டியலிட்டு உள்ளது.

சீனாவைப் போன்றே இலங்கையும் அழிந்து வரும் காட்டுயிரிகளின் சர்வதேச ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்நிலையில் எதையுமே விற்று டொலர்களாக்கும் முனைப்பில் உள்ள அரசாங்கம், சட்டபூர்வமான முறையில் நடைமுறைச்சாத்தியமற்ற செங்குரங்குகளின் ஏற்றுமதி குறித்து தொடர்ந்து பேசிக் கொண்டிருப்பதை உடனடியாக நிறுத்துதல் வேண்டும்.

கூடவே, குரங்குகளால் விவசாயத்துறைக்கு ஏற்பட்டுவரும் பாதிப்புகளைக் களைய ஒருங்கிணைந்த மாற்றுப் பொறிமுறையையும் விரைந்து நடைமுறைப்படுத்த முன்வர வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

---



### உள்ளூராட்சி சபை நிதி முகாமைத்துவ டிப்ளோமோ

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

நிதர்சன் விநோத்

உள்ளூராட்சி சபை நிதி முகாமைத்துவ டிப்ளோமோ கற்கை நெறியை பூர்த்தி செய்வதவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (19) கைதடியில் அமைந்துள்ள வடக்கு மாகாண சபையில் இடம்பெற்றது.

யுஎன்டிபி நிதி அனுசரணையில் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனமும் பொது நிதி கணக்காளர் சங்கமும் இணைந்து குறித்த கற்கைநெறியை பயிற்றுவித்தன. ஆறுமாத காலப்பகுதியை கொண்ட குறித்த கற்கைநெறியை வடக்கு மாகாணத்தில் உள்ளூராட்சி சபைகளில் பணியாற்றும் 24 பேர் பூர்த்தி செய்தனர்.

இந்நிகழ்வில், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சன், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவன பொது பிரிவு தலைவர் வி.கனகசபாபதி உள்ளிட்ட உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

---

# ஏப்.25 கதவடைப்பு போராட்டத்துக்கு யாழ். வணிகர் கழகம் ஆதரவு

நிதர்சன் விநோத்

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் அழைப்பில் எதிர்வரும் 25ஆம் திகதி நடைபெற உள்ள வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தழுவிய கடை அடைப்பு போராட்டத்துக்கு யாழ்ப்பாண வணிகர் கழகமும் தனது ஆதரவை தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாண வணிகக் கழகத்துக்கும் தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு வணிக கழகத்தில் இடம்பெற்றது. இதன்போது யாழ்ப்பாண வணிகர் கழகம் அனைத்து கடைகளையும் பூட்டி, பூரண ஆதரவு வழங்குவதாக தெரிவித்தது.

சந்திப்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் சார்பில் அதன் தலைவர் மாவை சேனாதிராஜா, தமிழ் தேசிய கூட்டமைப்பின் சார்பில் சுரேஷ் பிரேமசந்திரன், பா. கஜதீபன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




---

### வவுனிக்குளத்தில் நீர் குறைவாக உள்ளதால்

# சிறுபோக செய்கைக்காக நிலப்பரப்பு குறைப்பு

சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக செய்கை தொடர்பிலான இறுதி தீர்மானம் எடுக்கும் கூட்டம், புதன்கிழமை (19) வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தின் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் க. விமலநாதன் தலைமையில் நடைபெற்றது.

2023 ஆம் ஆண்டு வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக செய்கையில் நெல் 204 ஏக்கர் அளவிலும் சிறுதானியம் 400 ஏக்கர் அளவிலும் பயிர்செய்ய தீர்மானத்தின் அடிப்படையில் இறுதி முடிவெடுக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்யப்பட்ட காணியின் விஸ்தீரணம் 6,060 ஏக்கராக இருக்கின்ற போதும் இந்த ஆண்டு சிறுபோக செய்கைக்காக மொத்தமாக 604 ஏக்கர் மட்டுமே செய்கை பண்ணப்படவுள்ளது. காரணம் குளத்து நீரின் அளவு இம்முறை குறைவாகக் காணப்படுகின்றமையாகும்.

இதனடிப்படையில் நீர் வழங்கும் முதல் திகதியாக 24.04.2023 என்பதுடன் விதைத்து முடிக்கும் இறுதித் திகதி 15.05.2023 ஆகவும் 20.08.2023 அன்று குளத்து நீர் பூட்டப்படுமென தீர்மானிக்கப்பட்டுள்ளது.



---

# திருவையாறு சரவணாஸ் பாலத்தை அகற்ற தீர்மானம்

## புதிய பாலத்தை விரைவில் அமைக்கவும் திட்டம்

மு. தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட திருவையாறு பகுதியில் ஆபத்தான நிலையில் காணப்படும் சரவணாஸ் பாலத்தை முழுமையாக அகற்றுவதற்கு மாவட்டச் செயலகத்தில், அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், புதன்கிழமை (19) இடம்பெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது என, மாவட்டச் செயலக ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இரணைமடு நீர்ப்பாசன பிரதான கால்வாயின் மேலாக கட்டப்பட்டிருக்கும் சுமார் 40 வருடம் பழைமையான சரவணாஸ் பாலம், தற்போது சேதமடைந்து இடிந்து விழும் தறுவாயில் காணப்படுவதால், குறித்த பாலத்தின் ஊடாக பொதுமக்கள் பயணம் செய்ய முடியாத ஆபத்தான நிலை காணப்படுவதுடன், சீரான நீர்ப்பாசன வழங்கலையும் மேற்கொள்ள முடியாத சூழல் உருவாகியுள்ளது.

இடிபாடுகளுடன் காணப்படும் பாலத்தால் ஏற்படப்போகும் பாரிய ஆபத்துகளை தவிர்ப்பதற்காக, கிராம மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகளின் கோரிக்கைக்கு அமைவாக, பாலத்தை முழுமையாக அகற்றுவதாக முடிவு எட்டப்பட்டுள்ளது.

பாலத்தை அகற்றுவதற்கான முழு பொறுப்பினை நீர்ப்பாசன திணைக்களம் ஏற்றுக்கொண்டது. மேலும் புதிய பாலத்தை விரைவாக அமைப்பதற்கான திட்டத்தை விரைவாகத் தயாரித்து, நடைமுறைப்படுத்தி புதிய பாலத்தை விரையில் அமைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

---

### சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் இணைந்து வேண்டுகோள்

# புதிய சட்டத்தை எதிர்க்குமாறு சர்வதேசத்துக்கு அழைப்பு

ஏ.எச்.ஏ ஹுஸைன்

இலங்கை அரசாங்கத்தால் முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாதத்துக்கு எதிரான உத்தேச சட்ட மூலத்தை சட்டமாக்குவதற்கு முன்னரே, கடுமையாக எதிர்த்து அதைத் தடை செய்யுமாறு சர்வதேசத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக சட்டத்தரணிகள், புத்திஜீவிகள், செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள் இணைந்து மனுத் தயாரித்து அதில் கையொப்பமிட்டு இலங்கையிலுள்ள சர்வதேச நாடுகளின் இராஜதந்திரப் பணியகங்களுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

சட்டத்தரணிகளான சுரேன் டி பெரேரா, ஏர்மிசா டேகல், சுவஸ்திகா அருள்லிங்கம், சப்ரா ஜஹீத், கொட்பிரி யோகராசா செயற்பாட்டாளர்களான மரிசா த சில்வா, சந்துன் துடுகல, ருக்கி பெர்னாண்டோ, பி. கௌதமன் ஊடவியலாளர்களான ருவன் லக்நாத் ஜயக்கொடி, திசராணி குணசேகர உள்ளிட்ட இன்னும் பலர் இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

கொழும்பிலுள்ள இராஜதந்திரப் பணியகங்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது: பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் கோரிக்கையில் இலங்கையர்கள் ஒன்றிணைந்துள்ளனர். 2023 மார்ச் 17 மற்றும் 2023 மார்ச் 22 ஆகிய இரு தினங்களில் உத்தியோகபூர்வ அரசாங்க வர்த்தமானியில் ATA வெளியிடப்பட்டது.

இது, 2023 ஏப்ரல் பிற்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படலாம் என்பதற்கான மற்றும் பாராளுமன்றத்தால் அங்கிகரிக்கப்பட்டால் அதன் பின்னர் சட்டமாக இயற்றப்படலாம் என்பதற்கான அறிகுறிகள் காணப்படுகின்றன.

கொடிய சட்டமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) பதிலீடு செய்யும் நோக்கத்துக்காகக் கொண்டுவரப்படவுள்ள ATA இலங்கையின் ஜனநாயகத்துக்கு மிகப் பாரதூரமான அச்சுறுத்தலாகும்.

அட்டூழியம்மிக்க இந்த உத்தேச சட்டமூலத்தை வாபஸ் பெற்று, பயங்கரவாதத் தடைச் சட்டத்தை உடனடியாக நீக்குமாறு, அரசாங்கத்தைக் கோருகின்றோம். இந்த முயற்சியில் உங்களின் உதவியைக் கோரி நிற்கின்றோம் என்று அந்த வேண்டுகோளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

# பாராட்டும் கௌரவமும்

எம்.எஸ்.எம் நூர்தீன்




காத்தான்குடி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றி வந்த எம்.எம் அலியார் அரச சேவையில் இருந்து ஓய்வு பெறுவதையொட்டி, அவரை கௌரவிக்கும் நிகழ்வு காத்தான்குடி பிரதேச செயலகத்தில் புதன்கிழமை (19) நடைபெற்றது.

அரச சேவையில் 32 வருடங்கள் கடமையாற்றி, காத்தான்குடி பிரதேச செயலகத்தில் முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக பதவிவகித்து, ஓய்வுபெற்றுச் செல்லும் எம்.எம். அலியாரின் சேவைகளைப் பலரும் பாராட்டி உரையாற்றியதுடன் நினைவுப் பரிசுகளும் வழங்கி கௌரவித்தனர்.

---



# வெருகலில் விசேட கல்விப் பிரிவு திறப்பு

ஹஸ்பர்

திருகோணமலை, வெருகல் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இலங்கைத்துறை முகத்துவாரம் இந்துக் கல்லூரியில், விசேட கல்வி அலகை சமூக சேவை திணைக்களத்தின் ஏற்பாட்டில், வெருகல் பிரதேச செயலாளர் எம்.ஏ அனஸ் தலைமையில் புதன்கிழமை (19) திறந்துவைக்கப்பட்டது.

இந் நிகழ்வில், மூதூர் வலயக் கல்வி பணிப்பாளர் திருமதி இஸட்.எம்.எம் முனவ்வரா நளீம், மாவட்ட இணைப்பாளர் (சமூக சேவை) த. பிரணவன், சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சுபாசினி, பாடசாலை அதிபர் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

---



# 'ஆசானுக்காக கையேந்துவோம்' நினைவுரை

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது, மாளிகைக்காடு உலமா சபையின் பிரதித் தலைவரும், பிரதி அதிபருமான, சாய்ந்தமருது தஃவா இஸ்லாமிய கலாபீட பிரதானி மூத்த உலமா மௌலவி யூ.எல்.எம் காஸிமின் நினைவுப்பேருரையும், துஆ பிரார்த்தனையும் அவர் பிரதியதிபராக கடமையாற்றிய மாளிகைக்காடு அல்- ஹுஸைன் வித்தியாலயத்தில் பாடசாலை பழைய மாணவர்களின் ஏற்பாட்டில் புதன்கிழமை (19) நடைபெற்றது.

பாடசாலை பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.எல்.என் ஹுதா உமரின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மாளிகைக்காடு அந்நூர் ஜும்மா பெரிய பள்ளிவாசல் பேஸ் இமாம் மௌலவி ஏ.எல்.எம் மின்ஹாஜ், அண்மையில் காலமான மௌலவி யூ.எல்.எம் காஸிமுக்கான துஆ பிராத்தனையை நிகழ்த்தியதுடன் நினைவுரைகளை மாளிகைக்காடு அல்- ஹுசைன் வித்தியாலய ஸ்தாபக அதிபர் ஏ.எம் இப்ராஹிம் மற்றும் பழைய மாணவர் சங்க செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர் ஆகியோர் நிகழ்த்தினர்.

---

# 'வன்னிஹோப்' மட்டக்களப்புக்கு விஜயம்

வ. சக்தி



'வன்னிஹோப்' நிறுவனத்தின் கிழக்கு மாகாண பணிப்பாளர் எம்.ரி.எம் பாரீஸ் தலைமையிலான குழுவினர், போரதீவுப் பற்றுப் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பெரியபோரதீவு, பொறுகாமம், விவேகானந்தபுரம் உள்ளிட்ட பகுதிகளுக்குச் சென்று மக்களுடன் கலந்துரையாடினர்.

இதன்போது, பெரியபோரதீவு கைவினையாளர் சங்கத்துக்கு 'வன்னிஹோப்' அமைப்பால் முன்செய்யப்பட்ட உதவித்திட்டத்தின் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்ததுடன், அப்பகுதியில் 'வன்னிஹோப்' அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட வீட்டையும் பயனாளியிடம் கையளித்தனர்.

மேலும் பொறுகாமம், விவேகானந்தபுரம் பகுதிகளில் கைத்தறி வேலைகளை மேற்கொள்பவரிகளிடம் அவர்களுக்குத் தேவையான விடயங்கள் குறித்து கேட்டறிந்து கொண்டதுடன், போரதீவுப் பற்றுப் பிரதேச செயலகத்துக்கும் சென்று பிரதேச செயலாளர் ஆர். இராகுலநாயகியுடன் பிரதேச மக்களின் நிலைமை குறித்தும் கேட்டறிந்து கொண்டுள்ளனர்.

---

# 'படகுப் பாதையில் கட்டணம் அறவீடு செய்வதை உடன் நிறுத்து'

## பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்பு போராட்டம்

வ. சக்தி

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச அபிவிருத்திக் குழுக் கூட்டம் வியாழக்கிழமை (20) நடைபெற்றது. இந்நிலையில் குறித்த அபிவிருத்திக் குழுக் கூட்டம் நடைபெறுவதற்கு முன்னர், குறித்த பிரதேச செயலக வாயில் கதவின் முன்னால், கவனஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இலங்கை தமிழரசுக் கட்சியின் மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச கிளை ஏற்பாடு செய்திருந்த இக்கவனஈர்ப்பு போராட்டத்தில், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா. அரியநேத்திரன், கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் மா. நடராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர். 'பாழடைந்த வீதியை உடனே திருத்து', 'படகுப் பாதையில் கட்டணம் அறவீடு செய்வதை உடன் நிறுத்து', உள்ளிட்ட வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை அவர்கள் ஏந்தியிருந்தனர்.

அம்பிளாந்துறை - குருக்கள்மடம் படக்குப்பாதை, குருமண்வெளி - மண்டூர் படகுப் பாதையில் பணயம் செய்யும் பிரயாணிகளிடம் கட்டணம் அறவீடு செய்வதை உடன் நிறுத்த வேண்டும்; மிக நீண்ட காலமாக பழுதடைந்துள்ள அம்பிளாந்துறை - பட்டிப்பளை பிரதான வீதியை புனரமைப்புச் செய்து தரவேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன் வைத்தே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டு இருந்தது.

அவ்விடத்துக்கு வருகைதந்த இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன், போராட்டத்தில் கலந்துகொண்டவர்களுடன் உரையாடியதுடன் பாதை பிரயாணிகளிடமிருந்து கட்டணம் அறவிடுவதையும் மண் அகழ்வதையும் தடுப்பதற்குரிய நடவடிக்கையை தான் மேற்கொள்வதுடன் அம்பிளாந்துறை - பட்டிப்பளை பிரதான வீதி புனரமைப்பதங்கான திட்டத்தை உலக வங்கி அபிவிருத்தித் திட்டத்துக்கு சமர்ப்பித்து உள்ளதாகவும் தெரிவித்தார்.





## உலர்ந்த கஞ்சாவுடன் மூவர் கைது

■ சுமணசிறி குணதிலக்க

ஒக்கம்பிட்டிய பொலிஸ் பிரிவில் புதன்கிழமை (19) மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கையின் போது, 1,530 கிராம் உலர்ந்த கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 24 வயதுக்கும் 41வயதுக்கும் இடைப்பட்ட மூவரை, வெல்லவாய நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மருந்திடப்பட்ட துப்பாக்கி மீட்பு

■ சுமணசிறி குணத்திலக்க

மொனராகலை, கொட்டியாகல பிரதேசத்தில், சேனையில் அமர்ந்திருந்த நபரொருவர் மருந்திடப்பட்ட துப்பாக்கியுடன் புதன்கிழமை (19) கைது செய்யப்பட்டுள்ளார்.

31 வயதான இந்த நபர், மிருகங்களை வேட்டையாடுவதற்கு இந்த மருந்திடப்பட்ட துப்பாக்கியை பயன்படுத்துவதாக விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த எதிமலே பொலிஸார், சந்தேகநபரை சியம்பலாண்டுவ நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றனர்.

## தேர் உற்சவத்தில் குளவி தாக்குதல்

■ சுதத் எச்.எம்.ஹேவா

மஸ்கெலியா, மறே தோட்டத்தில் இடம்பெற்ற தேர் உற்சவத்தின் போது, குளவிகள் கலைந்துவந்து கொட்டியமையால் சுமார் 20 பேர் பாதிக்கப்பட்டு மஸ்கெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஞாயிற்றுக்கிழமை (16) தேர் பவனி வந்துக்கொண்டிருந்த போது, வீதியோரத்தில் இருந்த மரமொன்றில் கட்டியிருந்த குளவி கூடு கலைந்து கொட்டியுள்ளது.

# தோட்டவாரியாக மே தின நிகழ்வு

## மலையக தொழிற்சங்கங்கள் அதிரடி தீர்மானம்

■ ஆ.ரமேஸ்

உலக தொழிலாளர் தினமான மே தினத்தை இம்முறை பெருந்தோட்ட வாரியாக நடத்த மலையகத்தில் பிரபல தொழிற்சங்கங்கள் பல தீர்மானித்துள்ளன.

அதேநேரத்தில் மலையகத்தில் இயங்கும் இடதுசாரி அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வெகுஜன அமைப்புகள் அத்துடன் தோட்ட சேவையாளர் சங்கம் ஆகியவை பிரதான நகரங்களை தெரிவு செய்து மேதினத்தை நடத்தவுள்ளன.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அதன் மே தினத்தை அந்தந்த தோட்டங்களில் அனுஷ்டிக்கும் என காங்கிரஸின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான ஏ.பி சக்திவேல் தெரிவித்தார்.

அதேபோல, தொழிலாளர் தேசிய சங்கத்தின் 58ஆவது மே தின நிகழ்வு இம்முறை தோட்டவாரியாக நடத்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக சங்கத்தின் நிதி காரியத்தையும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினருமான சோ.ஸ்ரீதரன் தெரிவித்தார்.

மே தின நாளன்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் ஹட்டன் தலைமை காரியாலயத்தில் சங்கத்தின் கொடியேற்றப்பட்டு விசேட பூஜையும் இடம்பெறும் என்றார்.

மலையக மக்கள் முன்னணியின் தொழிற்சங்க பிரிவான மலைய தொழிலாளர் முன்னணி அதன் மே தின நிகழ்வை தோட்டங்களில் கொடியேற்றி அனுஷ்டிக்க தீர்மானித்துள்ளதாக முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

அதேநேரத்தில், லங்கா தேசிய தோட்ட தொழிலாளர் சங்கம் அதன் மே தின நிகழ்வை இம்முறை பதுளை நகரில் வெகு




விமரிசையாக அனுஷ்டிக்க உள்ளதாக சங்கத்தின் பொது செயலாளரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஸ் தெரிவித்தார்.

இந்த மே தின நிகழ்வில் நாடளாவிய ரீதியில் சங்கத்தில் அங்கம் வகிக்கும் உறுப்பினர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொள்ள உள்ளதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுப்பையா சதாசிவம் தலைமையிலான இலங்கை தொழிலாளர் ஐக்கிய முன்னணியின் மேதின நிகழ்வு குறித்து இன்னும் ஒரிரு தினங்களில் முன்னணியின் முக்கிய உறுப்பினர்கள் ஒன்றுகூடி முடிவெடுக்க உள்ளதாக சுப்பையா சதாசிவம் தெரிவித்தார்.

அதேநேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி) தொழிற்சங்க பிரிவில் ஒன்றான அகில இலங்கை தோட்ட தொழிலாளர் சங்கம் அதன் பிரதான கட்சியான மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து தலைநகர் கொழும்பில் மக்கள் பேரணியுடன் மே தினத்தை அனுஷ்டிக்க உள்ளதாக சங்கத்தின் நிதி காரியதரிசி கிச்சன் கலைச்செல்வி தெரிவித்தார்.

> **மே தினத்தை இம்முறை பெருந்தோட்ட வாரியாக நடத்த பிரபல தொழிற்சங்கங்கள் பல தீர்மானித்துள்ள அதேநேரத்தில், இடதுசாரி அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் உள்ளிட்ட வெகுஜன அமைப்புகள், தோட்ட சேவையாளர் சங்கம் ஆகியவை பிரதான நகரங்களை தெரிவு செய்து மேதினத்தை நடத்தவுள்ளன**

அத்துடன் தேசிய ரீதியில் இயங்கும் புதிய ஜனநாயக மார்க்சிச லெனினிச கட்சி வடக்கு, கிழக்கு, மலையகம் சார்ந்த பகுதிகளில் உள்ள நகரங்களில் மே தின நிகழ்வை நடத்த உள்ளதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன் தெரிவித்தார்.

அதேநேரத்தில், மலையகத்தில் நடைபெறவுள்ள மே தின நிகழ்வுகள் மாத்தளை மற்றும் இராகலையில் மக்கள் பேரணியுடன் இடம்பெறவுள்ளதாக தெரிவித்த அவர், இராகலையில் இடம்பெறும் மே தின நிகழ்வில் மே தின கோரிக்கைகளும் முன் வைக்க உள்ளதாக தெரிவித்தார்.

அதேபோல இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் மே தின நிகழ்வுகள் ஹட்டன் டி.கே டப்ளியூ மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

## ஒட்டுமொத்த கல்வி முறையும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது

■ மொஹொமட் ஆஸிக்



உயர்தர மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடுவதற்கு பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தவிர்ப்பதால், நாட்டின் ஒட்டுமொத்த கல்வி முறையும் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி ரோஹினி கவிரத்ன தெரிவித்துள்ளார்.

உயர்தர மாணவர்களின் விடைத்தாள்கள் மதிப்பிடாமையால், சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் குழுவொன்று சம்பளத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை நீக்குமாறு கோரியதால் பல்கலைக்கழகம் கிட்டத்தட்ட மூன்று மாதங்களாக மூடப்பட்டு பரீட்சைகள் நடத்தப்படவில்லை. இந்தச் சம்பவங்கள் அனைத்தும் சுமார் 12 இலட்சம் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மீது பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நாட்டில் இடைநிலைக் கல்வி, பாரிய நெருக்கடியை நோக்கிச் செல்கிறது. இன்று மாணவர்கள் 21 வயதில் தனியார் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற முடியும். அரச பல்கலைக்கழகத்தில் பட்டம் பெறும்போது 26 வயதாகி விடுகின்றது என்றார்.

இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை விட சுமார் மூன்று மடங்கு மாணவர்கள் தற்போது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கல்விக் கற்று வருகின்றனர். கல்விக்காக பணம் செலவழிக்கும் திறன் இல்லாத மாணவர்களில் பெரும்பாலானோர் அரச பல்கலைக்கழகங்களில் சிக்கித் தவிக்கின்றனர்.

> **அரச பல்கலைக்கழகங்களில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கையை விட மூன்று மடங்கு மாணவர்கள் தற்போது உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கல்விக் கற்று வருகின்றனர்**

இதேவேளை, தனியார் பல்கலைக்கழகங்களில் கற்றல் நடவடிக்கைகள் தொடர்கின்றன. உயர்தர விடைத்தாள்கள் மதிப்பீடு தொடர்பான நடவடிக்கைகளில் இருந்து தற்போது விலகியிருக்கும் பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் ஒரு பகுதியினரும் இந்த நிறுவனங்களில் கற்பித்து வருகின்றனர்.

1988-1994 காலப் பகுதியில் இலங்கை பல்கலைக்கழகங்களில் பரீட்சைகள் நடத்தப்படுவதிலும் பெறுபேறுகளை வெளியிடுவதிலும் ஏற்பட்ட காலதாமதம் காரணமாக இலங்கை கல்வி முறைக்கு பாரிய அழிவு ஏற்பட்டது.

வரிவிதிப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்க பல்கலைக்கழகப் பேராசிரியர்களுக்கு உரிமை இருந்தாலும், அவர்களின் தொழில் அடிப்படையில் சிறப்பு வரிச் சலுகைகளைப் பெற நாட்டின் இடைநிலைக் கல்வியை பணயக்கைதியாக வைத்திருக்க முடியாது என்றார்.

## 5,000 போலி நாணயத்தாள் 43 சிக்கின; இருவர் கைது

■ மொஹொமட் ஆஸிக்

5,000 ரூபாயாக மதிக்கக்கூடிய போலிய நாணயத்தாள்களை அச்சடித்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களிடமிருந்து 43 தாள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. இந்தச் சம்பவம் கண்டி, அலவத்துகொட நகரிலேயே இடம்பெற்றுள்ளது.

அலவத்துகொட நகரில் புகைப்படம் பிடிக்கும் நிலையத்தை நடத்திச் சென்றவர்களே இவ்வாறு போலி நாணயத்தாள்களை அச்சடித்து சந்தைக்கு விட்டுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

அந்த நிலையத்தில் இருந்த கணினி உள்ளிட்ட உபகரணங்கள் கைப்பற்றப்பட்டுள்ள அதேவேளை, நிலையத்துக்கு சீல் வைக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த பண்டிகை காலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வந்து 5,000 ரூபாய் நாணயத்தாளை மாற்றிக்கொண்டு சென்றவர்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அதனடிப்படையில் ஒருவர்



சிக்கியுள்ளார். அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அந்நபர், 5,000 ரூபாய் போலி நாணயத்தாளை மாற்றும் தரகர் என்பது கண்டறியப்பட்டது. பொலிஸாரை கண்டதும் அந்தநபர், தான் வைத்திருந்த சுமார் 40 போலி நாணயத்தாள்களை அருகிலிருந்த மலசலக்கூடத்தில் வீசியுள்ளார்.

அவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்திய போதே போலி நாணயத்தாள்களை அச்சிடும் நிலையம் கண்டுபிடிக்கப்பட்டது. கைப்பற்றப்பட்ட பொருட்களுடன் சந்தேநபர்கள் இருவரையும் கண்டி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## மரக்கன்று நாட்டும் நிகழ்வு

■ சிவாணி ஸ்ரீ

தமிழ்-சிங்கள புத்தாண்டை முன்னிட்டு அதன் ஒரு சம்பிரதாயமான வியாழக்கிழமை (20) காலை 6.38 மணி சுபநேரத்தில் மரக் கன்று நாட்டும் நிகழ்வு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தலைமையில் மாகாண சபை வளாகத்தில் இடம்பெற்றது.

சப்ரகமுவ மாகாண விவசாயத்துறை அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி நிகழ்வில் சப்ரகமுவ மாகாண பிரதான செயலாளர் மஹிந்த எஸ்.வீரசூரிய, மாகாண பிரதான அமைச்சின் செயலாளர் பிரபாத் உதாகர, மாகாண விவசாயத்துறை அமைச்சின் செயலாளர் தர்ஷன சமரசேகர உட்பட அரச அதிகாரிகளும் கலந்த கொண்டனர்.




## ஹட்டனில் சிறுநீர் கழிக்க ரூ.40 அறவீடு

■ செ.தி.பெருமாள்

ஹட்டன் பிரதான பஸ் தரிப்பிடத்தில் மக்கள் பாவனைக்கு உதவாத நிலையில் உள்ள கழிவறைக்கு சிறுநீர் கழிக்க செல்பவர்களிடம் 40 ரூபாய் பணம் அறவிடப்படுவதாக புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கழிவறை மிகவும் மோசமடைந்து உள்ள நிலையில், எப்போதும் துர்மணம் வீசுவதாகவும், கழிவறை பகுதியில் உள்ள கழிவு நீர் குழியில் வெடிப்புகள் ஏற்பட்டு தாழிறங்கி உள்ளதால் கழிவு நீர் வெளியே செல்லும் அபாயம் தோன்றியுள்ளது என்றும் அங்கு சென்று திரும்புவோர் தெரிவித்தனர்.

இது குறித்து ஹட்டன் நகர சபை



செயலாளர் டி.வி.பிபண்டாரவிடம் பஸ் நிலைய அதிகாரி, மற்றும் சாரதிகள், பயணிகள், நடத்துநர்கள், பாடசாலை மாணவர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் எந்த ஒரு நகரிலும் இவ்வாறு உள்ள கழிவறை பாவனைக்கு வழங்கப் படுவதில்லை. ஏனைய பகுதிகளில் உள்ள பொது கழிவறைகளில் சிறுநீர் கழிக்க 10 ரூபாய் மட்டுமே கட்டணம் பெறுகின்றனர்.


இருந்த போதிலும் மலையக பகுதிகளில் உள்ள அனைத்து பொது கழிவறை கட்டணமும் அதிகமாக உள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் கவனம் செலுத்தி முறையான கட்டணம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கட்டண விவரங்கள் மூன்று மொழிகளில் காட்சிபடுத்த வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## ஆண்ணொருவரின் சடலம் மீட்பு

எல்ல- இராவணெல்ல நீர்வீழ்ச்சியில் இருந்து சுமார் 300 மீற்றர் தொலைவில் சுமார் 65 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலம் எல்ல பொலிஸாரால் புதன்கிழமை (19) மலை மீட்கப்பட்டுள்ளது.

சடலம் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனவும் இறந்தமைக்கான காரணம் கண்டறியப்படவில்லை எனவும் தெரிவித்த எல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## பிரதமர் தலைமையில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்

பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் பதுளை கச்சேரியில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையில் வியாழக்கிழமை (20) நடைபெற்றது.

இந்நிகழ்வில், அமைச்சர் நிமல் சிரிபால டி சில்வா, கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே. எம். முசம்மில், இராஜாங்க அமைச்சர்களான தேனுக்க விதானகமகே, சாமர சம்பத் தசநாயக்க, ஜானக்க வக்கும்புர மற்றும் பதுளை மாவட்ட அதிபர் தமயந்தி பரணகம, பதுளை மாவட்ட அரச திணைக்களங்கள் பலவற்றின் தலைவர்கள், பணிப்பாளர்கள், உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# பிரபலமடைய முனையும் பேச்சுகளால் பாதிக்கப்படும் மாணவ சமூகம்

க.பொ.த உயர் தரப்பரீட்சை நிறைவடைந்து சுமார் இரண்டு மாதங்கள் கடந்தும், பரீட்சை விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை.

மதிப்பிடும் பணிகளில் ஈடுபடும் ஆசிரியர்கள் தமக்கான கொடுப்பனவு பிரச்சினைகள் மற்றும் அவற்றை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்கள் தமது சம்பள வரி அறவீடு தொடர்பான பிரச்சினைகளை முன்வைத்து இந்த விடைத்தாள் மதிப்பிடும் பணிகளில் ஈடுபடுவதை தவிர்த்து வருகின்றனர்.

ஆனாலும், கடந்த வாரம் கல்வி அமைச்சர் சந்திப்பொன்றில் கருத்து வெளியிடுகையில், கொடுப்பனவு அதிகரிப்புக்கான அனுமதியை தாம் சிபாரிசு செய்துள்ளதாகவும், திறைசேரியால் அது மறுக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டிருந்தார். நிதி அமைச்சின் கீழ் திறைசேரி காணப்படுவதுடன், நிதி அமைச்சராக ஜனாதிபதி திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறிருக்கையில், ஜனாதிபதியுடன் பல்வேறு அமைச்சுகளின் செயலாளர்கள் புதன்கிழமை (19) மேற்கொண்டிருந்த சந்திப்பின் போது மேற்படி விடயம் தொடர்பில் ஜனாதிபதி வினவியிருந்ததுடன், பரீட்சை விடைத்தாள்களைத் திருத்தும் பணிகள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும், கடந்த வருடம் இந்தத் திருத்தும் பணிகளுக்கு சமூகமளித்தவர்களைக் கொண்டு இந்த நடவடிக்கை உடனடியாக முன்னெடுக்க வேண்டும் எனவும், எக்காரணம் கொண்டும் பெற்றோர்களையும், மாணவர்களின் எதிர்காலத்தையும் பிணையாக கொள்ளக்கூடாது எனவும் கடினமான தொனியில் தெரிவித்திருந்தார்.

இதன் போது, வலுக்கட்டாயமாக பணிக்கு அழைப்பது தொடர்பில் தொழிலாளர் சட்டங்களுக்கு எதிராக செயலாற்ற முடியாது எனக் கருத்துத் தெரிவிக்கப்பட்ட போதிலும், அவற்றை பின்பு எதிர்கொள்வோம்; தற்போது இந்த விடைத்தாள் திருத்தும் பணிகளை அத்தியாவசிய சேவையாக பிரகடனம் செய்தேனும், கண்டிப்பாக அவற்றை திருத்துவோரை பணியில் ஈடுபடச் செய்வது, அவ்வாறு சமூகமளிக்கத் தவறுவோருக்கு எதிராக சொத்துப்பறிமுதல் செய்து திவால் நிலைக்கு கொண்டு செல்வது தொடர்பில் கவனம் செலுத்தப் போவதாக ஜனாதிபதி சர்வாதிகாரப் போக்கில் தெரிவித்திருந்தார்.

பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களின் எதிர்காலம் தொடர்பில் ஜனாதிபதி உண்மையில் கவனம் செலுத்தியிருந்தால், பரீட்சை இடம்பெற்ற காலப்பகுதியில் அமல்படுத்தப்பட்ட இரவு நேர 2 மணித்தியால மின்வெட்டு தொடர்பில் ஏன் கவனம் செலுத்தவில்லை? அத்துடன், வலுக்கட்டாயமாக அச்சுறுத்தி விடைத்தாள்களை மதிப்பிடும் பணிகளில் ஈடுபடுவோரை அழைத்து, பரீட்சை விடைத்தாள்களை மதிப்படச் செய்வதனூடாக, பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களுக்கே பாதிப்பு அதிகரிக்கும்.

சுயவிருப்பின் அடிப்படையில் பணிக்கு சமூகமளித்து சேவையில் ஈடுபடுவோரின் மனநிலைக்கும், வலுக்கட்டாயமாக, அச்சுறுத்தி பணிக்கு சமூகமளிக்கச் செய்து சேவையில் ஈடுபடுத்தப்படுவோரின் மனநிலைக்கும் பெருமளவு வேறுபாடுகள் காணப்படும்.

எவ்வாறாயினும், இந்த முரண்பாடுகளால் மொத்தத்தில் பாதிக்கப்படுவது மாணவர்களின் எதிர்காலமே. பிரபல்யமடைவதற்காக முன்பிருந்த ஜனாதிபதியால் மேற்கொள்ளப்பட்ட கருத்துகள் இறுதியில் அவரை எங்கு கொண்டு சென்று நிறுத்தியது என்பது அனைவருக்கும் நினைவிருக்கும். தற்போதைய ஜனாதிபதியும் அதனை நினைவில் கொள்வாராக!


தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

சட்டங்களை முறைப்படி செயற்படுத்தினால், குற்றங்கள் களையப்படும்.

பாகுபாட்டுடன் செயலாற்றும் அதிகாரிகள், ஒழுக்கம், நெறிமுறை, நியாயங்களை மதிக்காத மனிதர்கள், பொய்களை எப்பொழுதும் விரும்பிப் பேசுவார்கள். அவர்கள் எப்போதும் சண்டித்தனத்தால் மக்களைப் பயப்பிட வைப்பார்கள். வியாபாரத்தில் ஊழல் செய்து, தொழிலில் நெறிமுறை தவறி, மன்னிக்க முடியாத குற்றங்களைச் செய்யும் எத்தனை எத்தனை பேர்வழிகள் தப்பித்துக் கொண்டே இருக்கின்றார்கள்.

ஒழுக்கமற்றவர்களுடன் பழகுவது, நட்புறவை வளர்ப்பது, அவர்களிடம் கைநீட்டுவது என்பன சமூகத்துக்கு எதிரானவைதான். சட்டவிரோதிகளுக்கு வெட்கம் கிடையாது; கவலை இருக்காது. நேசம், மானம், ரோசம் பற்றிய சிந்தனைகளே கிடையாது. இன்று இலங்கை மக்கள், சந்தோசமாகவும் நிம்மதியாகவும் வாழுகின்றார்களா? ஒருவருக்கு ஒருவர் சுயநலமின்றி உதவிபுரிகின்றார்களா?

ஒருவரிடம் அன்பைப் பகிர்ந்து கொண்டாலே போதும். அவர்களுக்கு யானையின் பலம் வந்துவிடும். மக்கள் பேதமின்றி ஒருவருக்கு ஒருவர் துன்பங்களைக் களைந்திட, ஆறுதல்படுத்தலே பெரியவிடயம்.

மக்கள் நீதியுடன் வாழும்போதே துன்பங்கள்தொலைந்துவிடும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### அடிமேல் அடிவாங்கும் விவசாயிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தில் காணப்படும் இரண்டு நீர்பாசன திணைக்களங்களில் ஒன்று வவுனிக்குள நீர்பாசன திணைக்களம். வவுனிக்குள நீர்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள 12 குளங்களுக்குமான போதிய நீர்வரத்து இல்லாத நிலை காணப்படுகின்றது.

முத்தையன் கட்டு நீர்பாசன திணைக்களத்தின் கீழ் உள்ள குளங்களுக்கு போதிய நீர்வரத்து காணப்படும் நிலையில், அதிகளவில் விவசாயிகள் நெற்செய்கையை மேற்கொண்டு வருகின்றார்கள். தற்போது சிறுபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளார்கள்.

இந்த நிலையில் வவுனிக்குளத்தின் கீழ் 6,060 ஏக்கர் நெற்செய்கை காணிகள் பதிவில் காணப்பட்ட போதும் குளத்தின் நீர்மட்டம் தற்போது 12.5 அடியாக காணப்படுகின்றது. இந்த நிலையில் காலபோக நெற்செய்கை நிறைவடைந்துள்ளதை தொடர்ந்து மழையை எதிர்பார்த்து காத்திருந்த விவசாயிகளுக்கு ஏமாற்றமே காணப்பட்டுள்ளது. மழை இல்லாதநிலை இந்தமுறை காணப்பட்டதால், நீர்வரத்து இல்லாத நிலையில் 204 ஏக்கரில் நெற்செய்கையை மேற்கொள்ள, வவுனிக்குளம் நீர்ப்பாசன திணைக்களத்தில் நடைபெற்ற வவுனிக்குளத்தின் கீழான சிறுபோக நெற்செய்கை கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் வறுமை, பொருளாதார விலையேற்றம் காரணமாக விவசாயிகள் பல்வேறு இடர்களை எதிர்கொண்டுள்ள நிலையில், வவுனிக்குளத்தின் கீழான விவசாய செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு இயற்கை பெரும் ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளமை குறித்து, விவசாயிகள் வேதனை அடைந்துள்ளார்கள்.

செ. கீதாஞ்சன்

வலதுசாரி தீவிரவாதத்தின் நிழலில் – 23

# மதத்தைத் துணைக்கு அழைத்தல்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இலத்தீன் அமெரிக்க நாடுகளில் அரசியல் அதிகாரத்துக்கான அதிவலதின் போர் ஒவ்வொரு நாளும் மேலும் தீவிரமடைந்து வருகிறது. கண்டம் முழுவதும் இந்த எழுச்சிமிக்க வலதுசாரி இயக்கங்களை இயக்குவது எது? எந்தச் சர்வதேச சக்திகள் அவர்களை இணைக்கின்றன, ஏன் இணைக்கின்றன? அவர்கள் ஒருவருக்கொருவர் எவ்வாறு உதவுகிறார்கள்? அரசாங்கத்துக்கு உள்ளும் அதற்கு அப்பாலும் இடதுசாரிகளின் பதில் என்னவாக இருக்க வேண்டும்? இவை இன்றைய முக்கிய கேள்விகளாகும்.

சமீபத்திய தசாப்தங்களில் இலத்தீன் அமெரிக்காவில் சுவிசேஷ தேவாலயங்கள் அரசியல், சமூக, பொருளாதார அரங்கில் முன்னிலைக்கு வந்துள்ளன. தேவாலயத்தையும் அரசையும் பிரிக்கும் எல்லைகளை ஊடுருவி, பொதுமக்களின் ஒரு பகுதியினர் ஆதரிக்காத நிகழ்ச்சி நிரல்களை அவர்கள் நிர்வகிக்கிறார்கள்.

குறிப்பாக குடும்பம், பாலினம் அல்லது பாலியல் தொடர்பான பிரச்சினைகள் என்று வரும்போது, இலத்தீன் அமெரிக்க சமூகங்களில், இத்தேவாலயங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. கடந்த காலங்களில், இந்தத் தேவாலயங்களின் செல்வாக்கு, அவர்களின் சபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் இருந்தது.

இன்று, அரசியல் மையநீரோட்டத்தில் அவர்களின் அரசியல் கட்சி அல்லது தேர்தல் பிரதிநிதித்துவம், எச்சரிக்கை மணிகளை அடிக்க ஆரம்பித்துள்ளன. இது ஜனநாயகம் மற்றும் சில நிறுவப்பட்ட உரிமைகளுக்கு அச்சுறுத்தலாகவும், அதிவலதின் வளர்ச்சிக்கு வாய்ப்பானதாகவும் அமைந்து விடுகிறது.

இலத்தீன் அமெரிக்காவின் மக்கள் தொகையில் கிட்டத்தட்ட 22 சதவீதம் பேர் சுவிசேஷகர்களாக அடையாளப்படுத்துகிறார்கள். இது நீண்ட காலமாக தன்னை கத்தோலிக்கராகக் கருதும் ஒரு பிராந்தியத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய மாற்றமாகும். பெரும்பான்மையானவர்கள் (56 சதவீதம் பேர்) கத்தோலிக்கராக இருந்தாலும், ஒருபுறம் இந்த மதத்துடன் அடையாளம் காண்பது தொடர்ந்து குறைந்து வருகிறது. மறுபுறம், சுவிசேஷ தேவாலயங்களை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இங்கு கேள்வி யாதெனில், ஏன் இந்தத் தேவாலயங்கள், சிறுபான்மையினராக இருந்தாலும், பிராந்தியத்தில் அதிக செல்வாக்கு செலுத்துகின்றன. இவை, எவ்வாறு அதிவலதின் வளர்ச்சிக்கு உதவுகின்றன?

இவை வெவ்வேறு உள்நோக்கங்களைக் கொண்ட குழுக்கள், சமீப ஆண்டுகளில், குறிப்பாக அரசியல் நடவடிக்கைகளின் அடிப்படையில், பெந்தகோஸ்தே, நியோ-பெந்தகோஸ்தே குழுக்கள் மிகவும் வளர்ச்சியடைந்தவை. இவற்றுக்கும் அதிவலதுக்கும் நெருக்கமான உறவுண்டு. இந்தக் குழுக்கள் தங்கள் நம்பிக்கை, பேய்கள் மீதான நம்பிக்கை, நன்மைக்கும் தீமைக்கும் இடையிலான போராட்டத்தின் கருப்பொருளை அற்புதங்களின் கருப்பொருளைக் கொண்டு வகைப்படுத்துகின்றன.

இவர்களிடம் செழிப்பு இறையியல் (prosperity theology) என்ற விடயமும் செல்வாக்குச் செலுத்துகிறது. இது பொருளாதார செழுமைக்காக கடவுளுடன் ஓர் உடன்படிக்கையை நிறுவுவதைக் குறிக்கிறது. விசுவாசிகள் தேவாலயத்துக்கு எந்த அளவுக்கு நன்கொடை அளிக்கிறார்கள் என்பது அவர்களின் வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கருதப்படுகிறது.

இது இலத்தீன் அமெரிக்காவில் தொழில்முனைவோர் பிரச்சினையுடன் தொடர்புடையது. மேலும், தொழில்முனைவோராக கருதப்படும் மக்கள், குறிப்பாக குறைந்த நடுத்தர வர்க்கம் மற்றும் குறைந்த வருமானம் கொண்ட குழுக்களில் இது மிகுந்த செல்வாக்குடையதாக மாறியுள்ளது.

'பெந்தேகோஸ்தலிச' இயங்கியல் என்பது, உள்ளூர் பழக்கவழக்கங்கள் மற்றும் வழிபாட்டு முறைகளை தேவாலயங்களுக்குள் கொணர்ந்து, மக்களை நெருங்கும் நெகிழ்வுத்தன்மையில் தனித்து நிற்கிறது. அவர்களின் தேவாலய சேவைகள், ஆராதனைகள் மக்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியைப் பயன்படுத்தி நடத்தப்படுகின்றன. போதகர்கள் பொதுவாக அவர்கள் பிரசங்கிக்கும் சமூகங்களில் வாழ்கிறார்கள்; சமூகத்தின் ஒரு பகுதியாக உள்ளனர்.

கத்தோலிக்க மதகுருக்களைப் போலல்லாமல், அவர்களால் திருமணம் செய்துகொள்ள முடிகிறது, அதனால்தான் அவர்கள் மக்களுடன் நெருக்கமாக இருப்பதாகக் கருதப்படுகிறார்கள். அவர்கள் சமூக ஊடகங்களை மிகவும் விரிவாகப் பயன்படுத்துகின்றனர். சுவிசேஷ போதகர்களைப் பொறுத்தவரை, அவர்கள் செல்வாக்கு செலுத்துபவர்களாக உள்ளனர்.

சமுதாயத்தில் புதுமைக்கான ஆதாரங்களை அங்கிகரிப்பது மற்றும் வழிபாட்டில் அவர்களை இணைத்துக்கொள்வது போன்றவற்றில் அவர்களின் நெகிழ்வுத்தன்மை மிகுந்த பலனளிக்கிறது. 'சுவிசேஷ ராக்' இசைக்குழுக்கள் இதற்கு சிறந்ததோர் உதாரணம். இசைக் கச்சேரிகள், ஆடல்பாடல்கள், களியாட்டங்கள் இந்தக் குழுக்களுக்கு மிகவும் வலுவான உணர்ச்சிகளை தூண்டுபவையாகவும் அணிதிரட்டல் உபாயங்களாகவும் பயன்படுகின்றன.

இந்தத் தேவாலயங்கள் பெரும்பாலும் வணிக நிறுவனங்களைப் போலவே செயற்படுகின்றன; பின்பற்றுபவர்களுக்காக போட்டியிடுகின்றன. மேலும், அவர்களின் தேவாலயங்களுடன் உணவு மைதானங்கள், விளையாட்டு மைதானங்கள், குழந்தை பராமரிப்பு வசதிகளும் உள்ளன.

இந்தப் பொழுதுபோக்கு மற்றும் பராமரிப்பு வசதிகள், குடும்பங்கள் மத போதனைகளைப் பெறும் இடங்களாகும். இந்தத் தேவாலயங்கள் இவ்வாறுதான் தமக்கான சமூகத்தை உருவாக்குகின்றன. பாரம்பரிய கத்தோலிக்க சமயத்தின் இறுக்கமான நடைமுறைகள் நிலவிவந்த சமூகங்களில், இந்தச் சுவிசேஷ தேவாலயங்கள், புதுமையாகவும் நெகிழ்வுத் தன்மையுடையனவாகவும் இருந்தமை மிகுந்த கவர்ச்சிகரமானதாக இருந்தது.

இந்தத் தேவாலயங்கள் பொதுவாக சர்வாதிகார அரசியல் தலைவர்களுடன் இணைக்கப்பட்டுள்ளன, பிரேஸிலில் போல்சனாரோ, அமெரிக்காவில் டிரம்ப், பெருவில் ஆல்பர்டோ புஜிமோரி ஆகியோர் சில உதாரணங்கள். இவர்களின் எதேச்சதிகாரப் போக்குகள் மற்றும் பாலினம், பாலியல் தொடர்பான பிரச்சினைகளில் பொதுவாக மிகவும் பழைமைவாத நிகழ்ச்சி நிரல் என்பன இத்தேவாலயங்களின் இயங்கியலோடு பொருந்திப்போகின்றன.

பெந்தேகோஸ்தே சுவிசேஷகர்கள் தங்கள் அரசியல் ஈடுபாடு மற்றும் குடும்பத்தைப் பாதுகாப்பதில் ஒரு நிகழ்ச்சி நிரலை முன்வைப்பதன் மூலம் அவர்களின் இருப்பில் தனித்து நிற்கிறார்கள். ஏனெனில், குடும்பப் பிரச்சினை ஒரு தார்மிக நிகழ்ச்சி நிரலைப் பாதுகாப்பதில் வெளிப்புறமாக மட்டுமல்ல, உள்நாட்டிலும் மையமாக உள்ளது.

போதகர்களின் குடும்பங்கள் முன்மாதிரியாகக் காணப்படுவதால், அவர்கள் தேவாலயங்களைப் பின்பற்றுபவர்களுக்கு ஒரு வகையான தலைவர்களாக மாறுகிறார்கள். உதாரணமாக, நல்ல குடும்பத்தை முன்னுதாரணமாக பின்பற்ற வேண்டிய உதாரணபுருஷர்களாக இப்போதகர்கள் உள்ளார்கள்.

அதிவலது அரசாங்கங்களை உருவாக்குவதற்கு, இந்தத் தேவாலயங்கள் கடுமையாக உழைக்கின்றன. அதிவலது அரசாங்கங்களுக்கும் இவர்களுக்கும் இடையே ஒரு பொருளாதார பரிமாற்றம் உள்ளது. எடுத்துக்காட்டாக, போல்சனாரோவின் ஆட்சியிலிருந்து, அவர்களின் தேவாலயங்கள் பொருளாதார ரீதியாக பயனடைந்தன. பொருளாதார ரீதியாக மட்டுமல்ல, பழைமைவாத தார்மிக நிகழ்ச்சி நிரலை நோக்கி அரசை இட்டுச் சென்ற உறுதியான கொள்கைகளில் இவர்களின் பங்களிப்புப் பெரியது.

மற்றொரு எடுத்துக்காட்டு, பெருவிய தலைநகர் லிமாவின் அதிவலது மேயர் ரஃபேல் லோபஸ் அலியாகா; இராணுவம், பழைமைவாத கத்தோலிக்கர்கள் மற்றும் சுவிசேஷ போதகர்கள் ஆகியோரை இணைத்து ஒரு கூட்டணியை அமைத்து, தனது அதிவலது கட்சியை நிறுவினார்.

இங்கு கத்தோலிக்கர்களும் சுவிசேஷ போதகர்களும் இருவேறு துருவங்களாக இருந்தாலும், எவ்வாறு கூட்டணி அமைக்கிறார்கள் என்ற வினா எழுவது இயல்பானது. பழைமைவாதமும் அதிவலதும் இக்கூட்டணியை சாத்தியமாக்குகின்றன.

2018ஆம் ஆண்டு அர்ஜென்டீனியத் தலைநகர் ப்யூனஸ் அயர்ஸில், கருக்கலைப்புக்கு எதிரான போராட்டத்தில் இவ்விருவரும் கரங்கோர்த்துப் போராடினார்கள். இலத்தீன் அமெரிக்காவில் கவனிக்க வேண்டியது யாதெனில், பழைமைவாத கத்தோலிக்கர்களுக்கும் சுவிசேஷகர்களுக்கும் இடையே சில சமயங்களில் அரசியல் கூட்டணிகள் உருவாகின்றன. பழைமைவாதக் கத்தோலிக்கர்களும் சுவிசேஷகர்களும் ஒருவருக்கொருவர் போட்டியிடுகிறார்கள். ஆனால், அவர்கள் ஒருவருக்கொருவர் ஒத்துழைத்து ஒற்றுமையுடன் செயற்படும் நேரங்களும் உள்ளன. இடதுசாரிகளுக்கு எதிராக, கம்யூனிசத்துக்கு எதிராக, தொழிலாளர்களுக்கு எதிராக எனப் பலவற்றில் இவ்விரு குழுக்களும் கைகோர்த்துள்ளன.

கடந்த இரு தசாப்தங்களில் இந்தச் சுவிசேஷ சபைகள், அரசுகளில் மிகுந்த செல்வாக்குச் செலுத்துவனவாக மாறியுள்ளன. சுவிசேஷ சபைகளின் ஆதரவு இல்லாமல் இலத்தீன் அமெரிக்காவில் ஆட்சி செய்ய முடியுமா என்ற கேள்வி இப்போது கேட்கப்படுகிறது.

இவ்வினாவை ஆழ்ந்து நோக்கின், உருகுவேயில் அது சாத்தியமாகலாம். அர்ஜென்டினாவில் இன்னும் சாத்தியமாகலாம். பிரேஸிலில் அது சாத்தியப்படாமல் போகலாம். மெக்ஸிகோவில் இது சாத்தியமில்லை. சமூகத்தில் எத்தனை கத்தோலிக்கர்கள் மற்றும் சுவிசேஷகர்கள் உள்ளனர் என்பதில் அவர்கள் சுவிசேஷகர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சமூகம் எவ்வளவு மதம் சார்ந்தது என்பது ஒரு முக்கியமான காரணியாகும்.

எடுத்துக்காட்டாக, மெக்சிகோ மதச்சார்பின்மையை மிகவும் பாதுகாக்கும் சட்டத்தைக் கொண்டிருப்பினும் மக்கள்தொகையில் 95 சதவீதமானோர் தங்களை மதம்சார்ந்து அடையாளப்படுத்துகிறார்கள். எனவே அதிவலதின் முக்கியமான ஆதரவுத்தளமாக தொடர்ந்து மதம் திகழ்கிறது.

பிரேஸிலில் அதிவலதின் எழுச்சி, கொலம்பிய சமாதான உடன்படிக்கையைச் சீர்குலைத்தது. பிராந்தியமெங்கும் பாலின வேறுபாடுகளுக்கு எதிரான வெறுப்பரசியல், பெரு, சிலி, குவாட்டமாலா, ஹொண்டுரஸ் ஆகிய நாடுகளில் அதிவலதின் அரசியல் செல்வாக்கு என சுவிசேஷ சபைகளும் அதிவலதும் இணைந்து புதிய திசையில் இலத்தின் அமெரிக்காவை நகர்த்த முனைகின்றன.

# சிறை செல்லும் ராகுல் காந்தி?

அவதூறு வழக்கில் இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதை எதிர்த்து ராகுல் காந்தி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து சூரத் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் காங்கிரஸ் தலைவரான ராகுல் காந்தி 2019ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது, “மோடி என்ற பெயர் கொண்டவர்கள் திருடர்கள்” எனக் கூறி, பிரதமர் மோடியை அவர் மறைமுகமாகத் தாக்கியதாகவும் பாரதிய ஜனதா கட்சி சார்பில் சூரத் நீதிமன்றத்தில் வழக்குத் தொரடப்பட்டது.

இவ்வழக்கில் ராகுல்காந்தி குற்றவாளி எனத் தீர்ப்பளித்த சூரத் நீதிமன்றம், அவருக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை



விதித்ததோடு, ராகுல் காந்தி மேல்முறையீடு செய்வதற்காக 30 நாள்கள் இந்தத் தண்டனையை நிறுத்தியும் வைத்து உத்தரவிட்டது.

இதையடுத்து வயநாடு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ராகுல் காந்தியை, எம்.பி பதவியிலிருந்து தகுதி நீக்கம் செய்து மக்களவைச் செயலகம் அறிவித்தது.

இந்தச் சிறைத் தண்டனை காரணமாக, அடுத்த 8 ஆண்டுகளுக்கு ராகுல் காந்தி தேர்தலில் போட்டியிட முடியாத சூழல் உருவாகியுள்ளது.

ராகுல் காந்தியின் தகுதி நீக்கத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து கேரளா, தமிழ்நாடு, தெலங்கானா, பஞ்சாப், புதுடெல்லி உள்ளிட்ட மாநிலங்களில் காங்கிரஸ் கட்சியினர் போராட்டம் நடத்தினர்.

மேலும் அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் ராகுல் காந்தியின் தகுதி நீக்கத்துக்கு கண்டனம் தெரிவித்தனர். பின்னர் ஏப்ரல் 3 ஆம் திகதி, அவதூறு வழக்கில் சூரத் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை எதிர்த்து ராகுல் காந்தி மேல்முறையீடு செய்தார்.

இம்மனுவை விசாரித்த சூரத் நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேல்முறையீட்டு மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

## ‘ATM க்குள்‘ தேம்பி தேம்பி அழுத திருடன்

நாகை



`ATM க்குள் திருடச் சென்ற நபர் ஒருவர் திருட முடியாமல் தேம்பித் தேம்பி அழுத சம்பவம் நாகையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் நாகையில் உள்ள பிரபல தனியார் வங்கிக்குச் சொந்தமான ATM இயந்திரமொன்று உடைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்று சிசிடிவி கமெராப் பதிவுகளை ஆய்வு செய்த பொலிஸாருக்கு பெரும் அதிர்ச்சி காத்திருந்துள்ளது.

குறித்த பதிவில் மர்மநபர் ஒருவர் முகமூடி அணிந்தபடி, ஏ.டி.எம் இந்திரத்தை கடப்பாரை வைத்து உடைத்தும், பின்னர் பணம் எடுக்க முடியாமல் சுமார் 1 மணி நேரம் தேம்பி தேம்பி அழுதுவிட்டு கொள்ளை முயற்சியை கைவிட்டுச் சென்றதும் தெரியவந்தது. இதனையடுத்து தீவிர விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்தனர்.

விசாரணையில் “வேலை இல்லாமல் சுற்றித் திரிந்தேன்”, “மது அருந்த வேண்டும் போல் இருந்தது. கையில் பணம் இல்லை. அதனால் தான் அருகில் இருந்த ATM இயந்திரத்தை கடப்பாறையால் உடைத்தேன். எனினும் எனது முயற்சி பயனளிக்கவில்லை. முதல் முறை திருடுவதால் என்னவோ, முதல் திருட்டு முற்றிலும் கோணலாகிவிட்டது” எனக் கதறிக் கதறி அழுதுள்ளார்.

இதனையடுத்து குறித்த நபரைக் கைது செய்தபொலிஸார் , அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்துள்ளனர்.

## 2 டசின் விரல்களுடன் பிறந்த குழந்தை

தெலுங்கானா



ஆண் குழந்தையொன்று 12 கை விரல்கள் மற்றும் 12 கால் விரல்கள் என மொத்தம் 24 விரல்களுடன் பிறந்துள்ள சம்பவம் தெலுங்கானாவில் இடம்பெற்றுள்ளது.

தெலுங்கானா, கொருட்லா வைத்தியசாலையிலேயே சுங்கராபு சாகர் மற்றும் ரவளி தம்பதியினருக்கு குறித்த குழந்தை பிறந்துள்ளது.

இது போன்ற நிகழ்வு சமீப காலங்களில் அரிதானது என்பதால் மருத்துவ நிபுணர்கள் மற்றும் பொதுமக்களின் கவனத்தை இக்குழந்தை ஈர்த்துள்ளது.

இந்நிலையில் இது குறித்து கருத்துத் தெரிவித்த வைத்தியசாலை, “மருத்துவ வரலாற்றில் இது ஒரு மிகவும் அரிதான நிகழ்வு. இக் குழந்தையானது நல்ல ஆரோக்கியத்துடனும் உரிய எடையுடன் பிறந்துள்ளது” என்றது. இது குறித்து கருத்துத் தெரிவித்த பெற்றோர், “நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியுடன் உள்ளோம். எங்கள் மகனை கடவுள் கொடுத்த வரமாகவே கருதுகின்றோம். எங்கள் மகனை இளவரசன் போல் வளர்ப்போம்” இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

## சீனாவை பின்னுக்கு தள்ளிய இந்தியா

சீனா

உலக மக்கள் தொகை நிலை - 2023 அறிக்கையை ஐ.நாவின் மக்கள் தொகை நிதியம் நேற்றைய தினம் வெளியிட்டுள்ளது. அதில் உலகில் மக்கள் தொகை வளர்ச்சி எவ்வாறு இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, மக்கள் தொகையில் இந்தியா, இவ்வாண்டு சீனாவைப் பின்னுக்குத் தள்ளும் எனவும் இவ் ஆண்டின் இறுதியில் இந்திய மக்கள் தொகை 142.86 கோடியாக இருக்கும் எனவும், அதேநேரத்தில், சீன மக்கள் தொகை 142.57 கோடியாக இருக்கும் எனவும் மூன்றாம் இடத்தில் இருக்கும் அமெரிக்க மக்கள் தொகை 34 கோடியாக இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



## பாடப்புத்தகத்தில் கருணாநிதி



முந்தைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போது தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் கருணாநிதி எழுதிய தமிழ் செம்மொழிப் பாடலானது பாடசாலைப் பாடப்புத்தகத்தில் இடம் பெற்றிருந்தது.

இந்த நிலையில் சில மாதங்களுக்கு முன்பு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களிடம் பேசிய போது, கருணாநிதியின் வாழ்க்கை வரலாறு குறித்த பதிவுகள் பாடப்புத்தகத்தில் இடம்பெறும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் வருகிற கல்வியாண்டில் ஒன்பதாம் வகுப்பு தமிழ் பாடப்புத்தகத்தில் கருணாநிதி தமிழுக்கு ஆற்றிய சேவைகள், பங்களிப்புகள் குறித்த விரிவான தகவல்கள் இடம்பெறவுள்ளதாகப் பாடசாலைக் கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதற்கான பாடப்பகுதி இறுதி செய்யப்பட்டு புத்தகங்கள் தற்போது அச்சிடும் பணியில் இருப்பதாகவும் விரைவில் பாடப்புத்தகம் வெளிவரும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயிற்றில் முடிந்த முதலிரவு

முதலிரவு அன்று மணமகன் மணமகளின் வயிற்றைப் பார்த்ததால் திருமண பந்தம் முடிவுக்கு வந்த சம்பவம் மத்திய பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மத்திய பிரதேசம் ஷிவ்புரியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு அண்மையில் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்நிலையில் முதலிரவு அன்று தம்பதி தனிமையில் இருந்துள்ள போது மணமகன் மணப்பெண்ணின் வயிற்றுப் பகுதியில் தையல் போடப்பட்டிருப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்துள்ளார்.

பின்னர் ஏன் வயிற்றில் இத்தனை தையல்



போடப்பட்டுள்ளது என்று கேள்வி எழுப்பினார். அதற்கு அவர் “கீழே விழுந்ததால் காயம் ஏற்பட்டதாகவும் இதன் காரணமாகவே தையல் போடப்பட்டது” எனவும் தெரிவித்தார்.

எனினும் அவரது பதில் மணமகனுக்கு சந்தேகத்தை ஏற்படுத்தவே தீவிரமாக விசாரித்தில் குறித்த பெண் திருமணத்துக்கு முன்னர் ஒருவரை காதலித்ததும் அந்த நபர் மூலம் கர்ப்பமடைந்த நிலையில், அறுவை சிகிச்சை மூலம் கருவை கலைத்துள்ளதும் தெரியவந்தது.

இந்த உண்மைகளை பெண் வீட்டார் மறைத்து திருமணம் செய்து வைத்துள்ளனர். இது தொடர்பான தகவல்களை மருத்துவமனைக்கு சென்று உறுதிப்படுத்திய மணமகன், மனைவியை அவரது தாய் வீட்டிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இந்நிலையில் பெண் வீட்டார் கணவர் மீது வழக்கு தொடர்ந்து ஜீவனாம்சம் கோரியுள்ளனர். இந்த விவகாரத்தில் தனக்கு நியாயமான விசாரணை நடைபெற வேண்டும் என அந்த நபர் கோரிக்கை வைத்துள்ளார்.

# நியு அந்தனீஸ் குளுப் புதிய பதப்படுத்தல் ஆலை



நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் (பிரைவட்) லிமிடெட், தனது உற்பத்தி விரிவாக்க தந்திரோபாயத்தின் அங்கமாக, பதப்படுத்தல் ஆலையை அண்மையில் நிறுவியிருந்தது. இதனூடாக, அதிகரித்துச் செல்லும் நுகர்வோர் தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடிய வகையில், நிறுவனத்தினால் 200 தொன்களுக்கு அதிகமான பதப்படுத்திய உணவுத் தயாரிப்புகளை தயாரிக்கக்கூடியதாக இருக்கும்.

பதப்படுத்திய உணவுத் தயாரிப்புகள் தொழிற்றுறையில் படிப்படியாக பிரவேசித்த வண்ணமுள்ளன. நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் இந்த முறையை பின்பற்றுவதுடன், இலங்கையின் ready-to-eat frozen crispy meat பிரிவில் தனது தயாரிப்புகளை அறிமுகம் செய்திருந்தது.

மேலும், அண்மைய விரிவாக்க நடவடிக்கைகளினூடாக, உள்நாட்டு சந்தைக்கு மேலதிகமாக, பிரதான ஏற்றுமதி சந்தைகளுக்கும் முன்னுரிமையளித்து தனது கொள்ளளவுத் திறனை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மைக் காலங்களில் தனது தரமான ஆரோக்கியமான கோழி இறைச்சித் தெரிவுகளை இலங்கையிலிருந்து சர்வதேச நாடுகளுக்கு கொண்டு செல்லும் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுத்திருந்தது.

ஏற்கெனவே காணப்படும் நீர் சுத்திகரிப்பு ஆலைகள் போன்றன அடங்கலாக, சூழலுக்கு நட்பான ஏற்பாடுகளை பின்பற்றும் வகையில், புதிதாக உள்வாங்கப்பட்டுள்ள உட்கட்டமைப்பு உள்ளம்சங்கள் காணப்படுகின்றன. சென்ரல் யூனியனின் ISO 14064-1:2018க்கமைவான Greenhouse Gas (GHG) உறுதிப்படுத்தல் அறிக்கையை பின்பற்றும் ஒரே உற்பத்தியாளராக திகழ்கின்றமையையிட்டு நிறுவனம் பெருமை கொள்கின்றது.

தனது கோழி வளர்ப்பு செயற்பாடுகளை விரிவாக்கம் செய்வதிலும் நியு அந்தனீஸ் பார்ம்ஸ் பெருமளவு முதலீடுகளை மேற்கொண்ட வண்ணமுள்ளது. இதன் அங்கமாக, அண்மையில் புகழ்பெற்ற கோழித் தீன் உற்பத்தியாளர்களான Gold Coin Feed Mills (Lanka) Ltd ஐயும் கையகப்படுத்தியிருந்தது.

தனது பசுமையான கோழி இறைச்சி கொள்கை, நிலைபேறாண்மை போன்றவற்றுக்காக புகழ்பெற்றுள்ளதுடன், தனது பெறுமதிகளில் அதிகளவு அக்கறை கொண்டுள்ளது.

தனது விநியோக சங்கிலி ஆற்றல்களை வலிமைப்படுத்துவதற்கு மேலாக, நியு அந்தனீஸ் ஃபார்ம்ஸ் நுகர்வோர் சந்தைப்படுத்தல் செயற்பாடுகளையும் முன்னெடுத்த வண்ணமுள்ளது. நாடு முழுவதிலும் இலவச விநியோக செயற்பாடுகளை முன்னெடுக்கும் ‘தொரகடபலிய’ என்பதை அறிமுகம் செய்திருந்ததுடன், Meatlery எனும் வர்த்தக நாமத்தின் கீழ் விற்பனை சங்கிலித் தொடர்களையும் அறிமுகம் செய்திருந்தது. அமெரிக்காவின் தேசிய கோழி இறைச்சி சம்மேளனத்தின் நியமங்களை பின்பற்றுகின்றது. GMP, HACCP, ISO 22000, உள்நாட்டு மற்றும் சர்வதேச ஹலால் சான்றிதழ்கள் போன்ற தரப்படுத்தல் சான்றுகளையும் நிறுவனம் பெற்றுள்ளது.

# MoJo Lanka பயிற்சி நிலையம் ஆரம்பிப்பு


சர்வதேச அபிவிருத்திக்கான ஐக்கிய அமெரிக்க முகவரகம் (USAID) மற்றும் சர்வதேச ஆராய்ச்சி மற்றும் பரிவர்த்தனைகள் சபை (IREX) ஆகியன, இலங்கையில் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலை முன்னுரிமைப்படுத்தும் வகையில் Mojolanka.lk என்ற இணையத்தளத்தையும், கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலில் வலுவாக மும்மொழிகளிலும் நிபந்தனைகளை வழங்கும் ஒரு தளமான MoJo Lanka பயிற்சி நிலையத்திற்கான தாயகத்தை அறிமுகப்படுத்துவதாக அறிவித்துள்ளது.

ஜூன் 24-25, 2023 இல் திட்டமிடப்பட்டுள்ள MoJo Lanka கைத்தொலைபேசி மூலமான ஊடகவியல் விழாவை நோக்கிய முதற்படியாக இந்த அறிமுகம் உள்ளது.

USAID இன் ஜனநாயக இலங்கைக்கான ஊடக வலுவூட்டல் (MEND) நிகழ்ச்சித் திட்டம் IREX உடன் இணைந்து இலங்கையில் நடுநிலையான நம்பகத்தன்மை மிக்க செய்திகள் மற்றும் புறநிலை செய்திகள் மற்றும் தகவல்களுக்கான குடிமக்களின் கேள்வியை அத்துடன் அவற்றுக்கான அணுகலை மேம்படுத்துகிறது. MENDஆனது நாட்டில் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலில் முன்னோடியாக இருந்து வருவதுடன், நூற்றுக்கணக்கான ஆர்வமுள்ள கைத்தொலைபேசி மூலமான ஊடகவியவியலாளர்களுக்கு பயிற்சி மற்றும் ஆலோசனைகளை வழங்குகின்றது.

MoJo இலங்கை பயிற்சி நிலையம் என்பது கைத்தொலைபேசி மூலமான கதைசொல்லலின் அடிப்படைகள் பற்றிய தொடர் விளக்க காணொளிகளைக் கொண்டுள்ள ஓர் மெய்நிகர் பயிற்சி மையமாகும். காணொளிகள் ஆங்கிலம், சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகளில் கிடைக்கின்றதுடன், இந்த துறையில் உள்ள நிபுணர்களான டேவிட் ஹேவர்ட், காணொளி ஊடகவியலாளர்களால் வழிநடத்தப்படும் முதல் BBC செய்தி அறையின் ஆசிரியர்; K.C சாரங்க, விருது பெற்ற இலங்கையின் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலாளர் மற்றும் நடராஜா மணிவாணன், இலங்கையை தளமாகக் கொண்ட ஊடகப் பயிற்சியாளர் மற்றும் சுயாதீன திரைப்பட தயாரிப்பாளர் ஆகியோரால் தொகுக்கப்பட்டுள்ளன.

எதிர்வரும் வாரங்களில், இலங்கையின் கைத்தொலைபேசி மூலமான ஊடகவியலாளர்களை





> இலங்கையில் சுதந்திரமான தகவல் பாய்ச்சலுக்கு கைத்தொலைபேசி மூலமான ஊடகவியல் ஒரு மகத்தான முன்னேற்றமாகும்

முன்னுரிமைப்படுத்தும் நோக்கில் MEND ஒரு போட்டியை அறிவிக்கவுள்ளது. போட்டி ஆக்கங்கள் உள்ளூர் மற்றும் சர்வதேச நடுவர்களால் தீர்மானிக்கப்படுவதுடன் வெற்றியாளர்கள் ஜூன் மாதம் நடைபெறும் MoJo Lanka விழாவில் அறிவிக்கப்படுவார்கள்.

“இலங்கையில் சுதந்திரமான தகவல் பாய்ச்சலுக்கு கைத்தொலைபேசி மூலமான ஊடகவியல் ஒரு மகத்தான முன்னேற்றமாகும்" என USAID செயற்திட்ட பணிப்பாளர் கேப்ரியல் கிராவ் தெரிவித்தார். “நன்றாகப் பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் பொறுப்பான ஊடகங்கள் ஜனநாயகச் சமூகங்களின் மூலக்கல்லாகும். மேலும் ஜனநாயகம் பல இடங்களில் அழுத்தத்தின் கீழ் இருக்கும் இந்தக் காலங்களில் மிகவும் முக்கியமானதாகும். MoJo இலங்கை பயிற்சி நிலையத்தின் வெற்றியை USAID எதிர்பார்க்கிறது” என்று அவர் கூறினார்.


“MoJo இலங்கை பயிற்சி நிலையத்தை ஆரம்பிப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம்" என்று MEND இன் குழு தலைவர் ஜீன் மக்கென்சி தெரிவித்தார். "கைத்தொலைசி மூலமான ஊடகவியல் வேறு எந்த வழியையும் பெற இயலாத ஒரு சமூகத்திற்குள் ஒரு வழியை வழங்குகின்றது. Mojolanka.lk இணையத்தளம் மற்றும் எதிர்வரும் விழாவின் ஊடாக, IREX ஆனது இலங்கையர்கள் தங்கள் கதைகளைச் சொல்லும் திறன்களைப் பெற உதவுகின்றது. இந்த வகையான ஊடகவியலுக்கு மிகவும் பிரகாசமான எதிர்காலம் இருப்பதாக நாங்கள் உறுதியாக உணர்வதுடன், அதன் வளர்ச்சியை ஆதரிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம்” என்று அவர் கூறினார்.

# கொலனித்துவ சட்டங்களிலிருந்து விலகுதல்

**பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் பாரம்பரியமாகவே, ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான பாலியல் உறவுகளை 30க்கும் மேற்பட்ட நாடுகள் குற்றமாக்கியுள்ளன**



மதுரி தமிழ்மாறன்
தேசிய சட்ட ஆலோசகர்- இலங்கை, சர்வதேச சட்டவல்லுநர் ஆணைக்குழு



மனித உரிமைகளை மீறும் அந்நிய கலாசார மற்றும் ஒழுக்க நெறிமுறைகள் ஒருவரின் சொந்த சட்டமாகவும் நம்பிக்கையாகவும் மாற முடியுமா?

உண்மையாக, 1841ஆம் ஆண்டின் ‘அலைந்து திரிவோர் கட்டளை சட்டம்’ (Vagrants Ordinance of 1841) மற்றும் ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளைக் குற்றமாக்கிய 1883ஆம் ஆண்டின் தண்டனை சட்டக்கோவை (Penal Code of 1883) ஆகிய ‘விழுமிய’ சட்டங்களை, பிரித்தானிய கொலனித்துவம் இலங்கையில் அமல்படுத்தியிருந்தது.

பிரித்தானிய கொலனித்துவம் அறிமுகப்படுத்திய, ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளை குற்றமாக்கும் சட்டங்களை, சட்டம் மற்றும் நீதிமன்றங்கள் மூலம் நீக்குவதற்கு, முன்னாள் கொலனித்துவ நாடுகள் முயற்சிகள் எடுத்த வண்ணம் இருக்கும் நிலையில், இந்த விவாதம் மீண்டும் முன்னணி வகிக்கின்றது.

குடியேற்ற நாடுகளில் வாழ்கிறவர்களின் மனதில் பதியப்பட்டுள்ள ‘விக்டோரியன் காலத்தை’ சேர்ந்த மத மற்றும் விழுமிய நெறிமுறைகள், பிரித்தானிய கொலனித்துவத்தால் சட்டத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக, கல்வியாளர்கள் மற்றும் அரசு சாரா நிறுவனங்கள் தொடர்ச்சியாக ஆவணப்படுத்துவதைக் காணக் கூடியதாக உள்ளது.

2023 மார்ச் மாத கணிப்பீட்டின் படி, ஐக்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளில், ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் நடத்தையை சட்ட ரீதியாக 129 நாடுகள் அங்கிகரிப்பதுடன், ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளை 62 உறுப்பு நாடுகள் இன்னும் குற்றமாக்குவதுடன், இதற்கு மேலதிகமாக இன்னும் இரண்டு அரசுகள் இந்த உறவுகளை செயற்பாட்டில் குற்றமற்றதாக பேணுகின்றன என, ‘சர்வதேச தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புள்ளவர், திருநர் மற்றும் எதிர்பாலீர்ப்புள்ளவர்களுக்கான கூட்டமைப்பு’ (International Lesbian, Gay, Bisexual, Trans and Intersex Association - ILGA) தெரிவிக்கிறது.

> **பாகுபாடு காட்டப்படுதலை ஒழித்து, அவர்களுக்கும் சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பை பெற்றுக்கொடுக்க முடியும் என இலங்கை நிரூபித்துக் காட்ட வேண்டும்.**

இவ்வாறு ஒரே பாலின பாலியல் உறவுகளை குற்றமாக்கும் அரசுகளில் 30க்கும் அதிகமான அரசுகள், பிரித்தானிய கொலனித்துவ ஆட்சியின் பாரம்பரியமாக, ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளை குற்றமாக்கியுள்ளன.

1860இல் மெக்காலே பிரபுவினால் உருவாக்கப்பட்ட இந்திய தண்டனை சட்டக் கோவையையே (IPC) பல ஆசிய, ஆபிரிக்க நாடுகளின் தண்டனைச் சட்டக் கோவை முன்மாதிரியாக எடுத்துக் கொண்டது. இந்திய தண்டனை சட்டக் கோவையின் பிரிவு 377, பிரித்தானியாவின் 16ஆம் நூற்றாண்டில் உருவாக்கப்பட்ட ‘பக்கெரி’ சட்டத்தை தழுவி எடுக்கப்பட்டதாகும். இது போன்ற பிரிவுகள், கொலனித்துவ நாடுகள் உள்ள தண்டனை சட்டக் கோவைகளில் உட்புகுத்தப்பட்டதுடன் அவை, ‘பக்கெரி சட்டங்கள்’ அல்லது ‘சொடோமி சட்டங்கள்’(ஒரே பால் புணர்ச்சி சட்டங்கள்) என அறியப்பட்டன.

இந்தச் சட்டங்களை ஆங்கிலேயர்கள், கொலனித்துவ நாடுகளுக்குள் கொண்டுவந்தமைக்கான காரணம், கவர்ச்சியான மற்றும் அதிகப்படியான சிற்றின்ப கலாசாரத்தால் ஆசியா, மத்திய கிழக்கிலுள்ள பிரித்தானியப் படைவீரர்கள், வழிதவறாமல் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தால் ஆகும்.

கொலனித்தவ நாடுகளில், தொழிலாளர் எண்ணிக்கையை செழிக்க வைப்பதற்கு அங்கு பிச்சை எடுப்பது, அலைந்து திரிவது, வீடில்லாமல் இருப்பது ஆகியவற்றை ‘அலைந்து திரிவோர் கட்டளை சட்டம்’ மற்றும் ‘பக்கெரி சட்டங்கள்’ மூலம் குற்றமாக்கியிருந்தனர்.

வுல்ஃபென்டன் (Wolfenden) குழுவின் பரிந்துரையின் பேரில், 1967ஆம் ஆண்டில், இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் நாடுகளில், 21 வயதுக்கு மேற்பட்ட இரு ஆண்களுக்கு இடையேயான தன்பாலீர்ப்பு நடவடிக்கைகளை குற்றமற்றதாக்கியது.

ஜெ. எஸ் மில், எச்.எல்.ஏ ஹார்ட் ஆகியோரால் பிரபலப்படுத்தப்பட்ட குற்றவியல் சட்டத்துக்கும் ஒழுக்கத்துக்கும் இடையிலான உறவுகள் தொடர்பான தொடர்பு, 1957ஆம் ஆண்டு வுல்ஃபென்டன் குழுவின் ஆய்வுக்கு உட்பட்டது. ‘சட்டம் எனும் முகவர் மூலம், குற்றத்தை பாவத்துடன் சமப்படுத்த சமூகம் வேண்டுமென்றே முயலும் சந்தர்ப்பத்தைத் தவிர, தனிப்பட்ட ஒழுக்கம் மற்றும் ஒழுக்கமின்மை ஆகியவற்றுக்கென ஒரு தனிப்பட்ட பரப்பு காணப்பட வேண்டும். அத்துடன், இதை சுருக்கமாகவும் எளிமையான வார்த்தைகளாலும் கூறும் போது, சட்டத்தால் எதன்மீதும் அத்தியாவசியம் இல்லாமல் உள்நுழைய முடியாது; அதன் உள் அர்த்தத்தை புரிந்துகொண்டு, குற்றவியல் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது, கெடுதல்களை குறைத்துக்கொள்வதற்கே அல்லாமல், ஒழுக்கக் கொள்கைகளை இயற்றுவதற்கு அல்ல’ என அவ்வறிக்கை கூறியது.

இந்தச் சட்டங்களை பயன்படுத்தி, நபர்களை அச்சுறுத்துவதற்கும், அவ்வாறு அவமானம் அச்சுறுத்தல்களுக்கு உள்ளான நபர்கள், தமக்கு எதிராக ‘சொடோமி’ சட்டங்களின் கீழ் குற்றச்சாட்டு முன்வைக்கப்படுமோ என்ற அச்சத்தால் அது தொடர்பாக பொலிஸ் நிலையத்துக்குச் சென்று புகாரளிக்காமல் இருப்பதாக இந்த அறிக்கை எச்சரிக்கின்றது. இது உண்மையாக இருப்பதுடன், இன்றும் இலங்கையில் பொதுவான நிகழ்வாகும்.

2018ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் தெரசா மே, “கொலனித்துவ நாடுகளுக்கு அறிமுகம் செய்யப்பட்ட ‘சொடோமி’ சட்டங்களின் விளைவாக ஏற்பட்ட பாகுபாடு, வன்முறை, மரணம் ஆகியவற்றில் பிரித்தானியாவின் பங்களிப்பை நினைத்து, மிகவும் வருத்தப்படுகிறேன்” என்று பொதுநலவாய நாடுகளிடம் தெரிவித்திருந்தார். ஆகவே, ஒரே பாலின பாலியல் நடத்தை உறவுகளை குற்றமற்றதாக்குமாறு அவர், பொதுநலவாய நாடுகளிடம் கோரிக்கை விடுத்தார்.

இலங்கை தண்டனை சட்டக் கோவை பிரிவு 365 மற்றும் பிரிவு 365 A ஆகியவை முறையாக, ‘இயற்கை நியதிக்கு முரணான தவறுகள்’ மற்றும் ‘ஆட்களுக்கு இடையில் மிக்க இழிவான செயல்கள்’ என்பனவற்றைக் குற்றமாக்குகிறது. தண்டனை சட்டக் கோவை இந்தச் சொற்றொடர்களுக்கு தெளிவான பொருளை வழங்காவிட்டாலும், இரு பிரிவுகளும் ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் செயல்களை குற்றமாக்குகின்றது எனப் பரவலாக புரியப்பட்டுள்ளது. இந்தக் குற்றங்களை செய்தவர்களுக்கு பத்து ஆண்டுகள் வரை

> **இலட்சணங்கள் தமது கலாசாரங்களில் இருப்பதாகச் சுட்டிக்காட்டி இந்தியா, நேபாள நீதிபதிகளால் வாதங்கள் கட்டியெழுப்பப்பட்டன**

சிறைத்தண்டனை கொடுக்கப்படலாம்.

இலங்கையின் அலைந்து திரிவோர் கட்டளை சட்டமானது, இந்தியாவின் ‘பக்கெரி’ சட்டங்கள் போல ஒழுக்கமான நடத்தையை நடைமுறைப்படுத்துவதற்காக, ‘கலவரம் செய்தல் மற்றும் ஒழுங்கற்ற விதத்தில் செயற்படுதல்’, ‘அலைந்து திரிதல்’, ‘தரித்திரத்தல்’, ‘பொய்யாக பாசாங்கின் பேரில் பிச்சை எடுத்தல்’, ‘காயங்கள், ஊனம், குஷ்டம் அல்லது வேறு அருவருப்பான நோய்களை வெளிப்படுத்த முயல்தல்,‘பணம் கேட்டல்’, ‘ஒழுக்கமற்ற செயல்கள்’ போன்ற சில சமூக நடத்தைகளை தண்டனைக்கு உட்படுத்துகிறது.

பொலிஸார் வழமையாக, ‘அலைந்து திரிவோர் கட்டளை சட்டத்தை’ பயன்படுத்தி, அவர்களது உண்மையான அல்லது அனுமானிக்கப்பட்ட பாலீர்ப்பு, பாலின அடையாளம், பாலின வெளிப்பாடு ஆகியவற்றின் கீழ் கைது செய்கிறார்கள். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யபடுவதில்லை. அத்துடன், மிக அரிதாகவே அவர்கள் நீதிமன்றத்துக்கு அழைத்துச் செல்லப்படுகிறார்கள். அதற்குப் பதிலாக, அவர்கள் துன்புறுத்தப்படுவதோடு கேலி செய்யப்பட்டு, அவர்கள் விடுதலை அடைய வேண்டி அநேகமாக இலஞ்சம் செலுத்தவும் நேரிடுகிறது.

அலைந்து திரிவோர் கட்டளை சட்டத்தை நீக்குமாறும், முக்கியமாக தடுப்பு இல்ல கட்டளை சட்டத்தையும் (Houses of Detention Ordinance) அலைந்து திரிவதுடன் தொடர்புடைய ஏனைய அனைத்து சட்டங்களையும் மீளாய்வு செய்து, அந்தச் சட்டங்கள் சர்வதேச மனித உரிமைகள் சட்டங்களின் தரங்களுக்கு அமைவாக இருக்கின்றதா என உறுதி செய்யுமாறு சர்வதேச சட்டவல்லுநர் ஆணைக்குழுவால் (ICJ) கடந்த ஆண்டு வெளியிடப்பட்ட ஒரு விளக்க அறிக்கை கோரியது.

‘கொலனித்துவ சட்டவியலை நீக்குதல்: கொலனித்துவத்துக்குப் பின்னரான நாடுகளில் விளிம்புநிலை மக்களின் கண்ணியம், தனியுரிமை, சமத்துவம், பாகுபாடு காட்டப்படாமை ஆகிய உரிமைகளைப் பாதுகாத்தல்’ தொடர்பாக 2023 மார்ச் மாதம் சர்வதேச சட்டவல்லுநர்கள் ஆணைக்குழுவால் ஆசிய மற்றும் ஆபிரிக்க நீதிபதிகள் மற்றும் மனித உரிமைகள் ஆர்வலர்களுடன் தெற்கு - தெற்கு சட்ட கருத்தாடல் ஒழுங்கமைப்பு செய்யப்பட்டு இருந்தது.

இந்தக் கருத்தாடல் மூலம், முன்னாள் கொலனித்துவ நாடுகளில் வாழும் பாலியல் மற்றும் பாலின சிறுபான்மையினரைச் சேர்ந்த தனிநபர்களின் மனித உரிமைகள் மீது, சட்டம் மற்றும் கொலனித்துவம் ஏற்படுத்திய தாக்கம் பற்றி கவனிக்கப்பட்டது.

ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்குதல், தன்பாலீர்ப்புள்ள பெண், தன்பாலீர்ப்புள்ள ஆண், இருபாலீர்ப்புள்ளவர், திருநர், எதிர்ப்பாலீர்ப்புள்ளவர்களுக்கு எதிரான பாகுபாடுகள், பிரித்தானிய கொலனித்துவ கருத்துகள் வாயிலாக சட்டத்தின் மூலம் வேரூன்றப்பட்டதன் விளைவாகும் என்று, கருத்தாடலில் பங்கேற்ற அனைவரும் உடன்பட்டதுடன், குற்றமாக்குதல் அல்லது பாகுபாடு காட்டுதல் என்பன, கொலனித்துவ நாடுகளில் காணப்பட்ட வளமான கலாசார பாரம்பரியத்தின் மூலம் வழித்தோன்றலாக வந்ததல்ல என்பதை விழிப்புணர்வூட்டுவதே அத்தியாவசியமானதாகும் எனவும்

> **கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் போது, ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான உறவுகள் மீதான பயம், மேற்கத்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது ஆகும்**

ஏற்றுக்கொள்ளப்பட்டது..

இதன்போது, ஒரே பாலின பாலியல் உறவுகளை சித்திரிக்கும் இந்தியாவின் ‘கஜுராஹோ’, கொனார்க்கில் உள்ள இந்துக் கோவில்களிலும், அஜந்தா மற்றும் எல்லோராவில் உள்ள புனிதமான பௌத்த குகைகளிலும் உள்ள சிலைகள், ஓவியங்கள், மற்றும் திருநர் அல்லது எதிர்ப்பாலீர்ப்புள்ளவர்கள் என நம்பப்படும் ‘அரவான்’, ‘சிகண்டி’ எனும் மகாபாரதத்தின் கதாபாத்திரங்களை ஏற்றுக்கொள்வதன் மூலம், பிரித்தானியர்கள் மூலம் பரப்பப்பட்ட குறுகிய மத மற்றும் காலாசார எண்ணக்கருக்களை விட, மிகவும் முற்போக்கான இலட்சணங்கள் தமது கலாசாரங்களில் இருப்பதாகச் சுட்டிக்காட்டி இந்தியா, நேபாள நீதிபதிகளால் வாதங்கள் கட்டியெழுப்பப்பட்டன.

தென்னாப்பிரிக்கா, போட்ஸ்வானா, சீஷெல்ஸ் போன்ற ஆபிரிக்க நாடுகளும் ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகளை குற்றமற்றதாக்கியதன் மூலம், கொலனித்துவ ஆட்சியின் தளைகளை நீக்கியுள்ளது.

இந்த முன்னேற்றமானது தங்களது கலாசார அடையாளங்களை தழுவிக்கொண்டமையாலும் உபுண்டு அல்லது ஆபிரிக்க மனிதநேயத்தின் அடிப்படைக் கருத்தைத் தழுவியதன் விளைவாக LGBTI நபர்களின் மனித உரிமைகளை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை அறிந்தமையால் ஏற்பட்டதாகும்.

ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலியல் உறவுகள், மேற்கத்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை என்று மக்கள் மத்தியில் காணப்படும் நம்பிக்கையை வெளியேற்றுவதற்கும், இதில் நிலவும் உண்மைத் தன்மை இதற்கு எதிராக முற்றிலும் வேறுபட்டது என சுட்டிக்காட்டுவதும் இது தொடர்பான புரிதல்களை பெறுவதற்கு அத்தியாவசியமாகும். அவ்வுறவுகளை ஏற்றுக்கொள்வது ஆசிய, ஆபிரிக்க கலாசாரத்தின் ஒரு பகுதியாக இருக்கும் போது, ஒரே பாலினத்தவர்களுக்கு இடையிலான உறவுகள் மீதான பயம், மேற்கத்திய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டது ஆகும்.

1994ஆம் ஆண்டு டூனன் எதிர் அவுஸ்திரேலியா வழக்கில், தாஸ்மேனியாவின் ‘சொடோமி’ சட்டங்கள், சர்வதேச சிவில் மற்றும் அரசியல் உரிமைகள் சமவாயத்தின் (ICCPR) 17ஆம் உறுப்புரையையும் (தனியுரிமை) 26ஆம் உறுப்புரையையும் (பாகுபாடு காட்டப்படாமை) மீறியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் குழு தீர்ப்பளித்தது.

அதேபோல, தாஸ்மேனியாவால் முன்வைக்கப்பட்ட ‘பொதுமக்கள் விழுமியங்களைக் காத்தல்’ என்ற வாதத்தை, மனித உரிமைகள் குழு நிராகரித்தது. அதிலிருந்து, ஒரே பாலின உறவுகளுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய பாலின உறவுகளைக் குற்றமற்றதாக்கும் படி மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் ஐக்கிய நாடுகளின் ஏனைய சமவாயத்தின் மூலம் உருவாக்கப்பட்ட குழுக்களால் உறுப்பு நாடுகளிடம் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட வண்ணம் உள்ளன. மிக சமீபத்தில், இதே போன்ற பரிந்துரைகளை இலங்கைக்கு வழங்க மனித உரிமைகள் குழு தீர்மானித்தது.

பாலியல் மற்றும் பாலின சிறுபான்மையினரை ஏற்றுக்கொண்ட வளமான கலாசாரத்துக்குத் தாம் உரித்துடையவர்கள் என கென்யா மற்றும் உகாண்டா போன்ற அரசுகளிலுள்ள ஆர்வலர்கள் சக பிரஜைகளுக்கு நினைவூட்டுவதற்கு போராடி வருகிறார்கள். அதேவேளை, பாகிஸ்தானில் சற்றே முன்னேற்றகரமான 2018 ஆம் ஆண்டின் திருநர் பாதுகாப்பு சட்டத்தை (Transgender Protection Act of 2018) நீக்குவதன் மூலம், மனித உரிமைகளை இழக்க செய்யும் சட்ட வரைபுகளுக்கு எதிராக, அந்நாட்டின் ஆர்வலர்கள் போராட்டங்கள் செய்துவருகின்றார்கள். அந்தந்த நாடுகளின் நிலைமைகள் இவ்வாறு இருக்கும்போது, இந்த விவாதம் மாத்திரமல்லாமல், ஒரே பாலுறவுகளை குற்றமற்றதாக்குதல் என்பது, மறுபடியும் சூடான தலைப்பாக இலங்கையிலும் உருமாறியிருப்பதால், இலங்கைக்கும் இது முக்கியமானது என்பதை நினைவூட்டல் அவசியமாகும்.

ஒரே பாலின உறவுகளுக்கு இடையிலான ஒப்புதலுடன் கூடிய உறவை குற்றமற்றதாக்கி, பாலியல் மற்றும் பாலின சிறுபான்மையினரின் உரிமைகளை பாதுகாப்பதற்குத் தேவையான சட்ட சீர்த்திருத்தத்தை அறிமுகம் செய்து, கொலனித்துவ ஆட்சியின் கீழ் எமக்கு அளிக்கப்பட்ட விழுமியங்களிலிருந்து விடுபட்டு, LGBTI தனிபர்களுக்கு எதிராக நடைபெறும் பாகுபாடு காட்டப்படுதலை ஒழித்து, அவர்களுக்கும் சட்டத்தின் கீழ் சமமான பாதுகாப்பை பெற்றுக்கொடுக்க முடியும் என இலங்கை நிரூபித்துக் காட்ட வேண்டும்.

ஏமன்

# இலவசத்தால் 85 பேர் பலி




ஏமனில் புனித ரமழான் பண்டிகையை முன்னிட்டு இலவசமாக வழங்கப்பட்ட பொருட்களைப் பெறச் சென்ற 85 பேர் கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

ரமழான் பண்டிகையை முன்னிட்டு ஏமனில் உள்ள சானா நகரில் உள்ள ஒரு பள்ளிவாசலில் இலவச உதவித் தொகை வழங்கும் நிகழ்ச்சியொன்று நடைபெற்றது.

இதனையடுத்து குறித்த இடத்தை நோக்கி மக்கள் படையெடுத்ததால் அப்பகுதியில் பெரும் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இந்நிலையில் இக்கூட்ட நெரிசலில் சிக்கி 85 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 300க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்களில் சிலர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என அஞ்சப்படுகின்றது.

சீனா

## சீனாவை எதிர்கொள்ள மக்களுக்குப் பயிற்சி



சீனாவுக்கும் தாய்வானுக்கும் இடையே கடந்த சில மாதங்களாகப் போர் பதற்றம் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக தாய்வானை சுற்றி வளைக்கும் வகையில் சீன போர்க்கப்பல்கள் நிறுத்தப்பட்டுள்ளதோடு சீன போர் விமானங்கள் அடிக்கடி தாய்வான் பரப்பில் அத்துமீறி நுழைந்து வருகின்றன.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் அமெரிக்காவும் ஜப்பானும் தாய்வான் கடல் கூட்டு போர் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றன.

இதனால் தாய்வானில் போர் பதற்றம் ஏற்பட்டுள்ளது. கடந்த ஆண்டு தொடங்கிய உக்ரேன்-ரஷ்யா போர் குறித்த செய்திகள் வெளியாகி, போரினால் ஏற்படும் பேராபத்தை உலகிற்கு உணர்த்தின.

இதையடுத்து ஒருவேளை சீனா எம்மீது போர் தொடுத்தால் பொதுமக்கள் தங்களை எப்படி தம்மை பாதுகாத்துக் கொள்வது, ஆயுதங்கள் இல்லாமல் எதிரி நாட்டு படைகளை எப்படி எதிர்கொள்வது உள்ளிட்ட பயிற்சிகளை தாய்வான் அரசு வழங்கி வருகின்றது.

இதற்காக நாடு முழுவதும் பயிற்சி முகாம்களை நடத்தி வருகிறது. இந்நிலையில் பொதுமக்களும் மிகவும் ஆர்வமாக இந்த பயிற்சிகளில் கலந்து கொண்டு வருகின்றனர் எனவும் போர் நடைபெற வாய்ப்புள்ளதால் இது போன்ற பயிற்சிகள் அவசியம் என தாங்கள் கருதுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குவைத்

## 1 கி.மீ உயரத்தில் கோபுரம்; குவைத் அதிரடி



டுபாய், சவூதி அரேபியா, கட்டார் உள்ளிட்ட நாடுகள் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் விதமாக தங்கள் நாடுகளில் பிரமிக்கவைக்கும் கட்டுமானங்களை அமைத்து வருகின்றன.

குறிப்பாக டுபாயில் உள்ள புர்ஜ் கலிபா என்ற கோபுரமே உலகில் உள்ள உயரமான கட்டடமாக திகழ்கின்றது.

இதன் உயரம் 828 மீற்றர் ஆகும். இந்நிலையில் இக்கட்டடத்தை மிஞ்சும் வகையில் புதிய கோபுரமொன்றை அமைக்க குவைத் அரசு திட்டமிட்டுள்ளது.


'புர்ஜ் முபாரக் அல் கபீர்' எனப் பெயரிடப்பட இருக்கும் இந்த கோபுரம் ஒரு கிலோமீற்றர் உயரம் கொண்டதாக அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இக்கட்டடமானது குவைத்தின் சில்க் சிட்டியின் முக்கிய ஈர்ப்பாக அமையும் எனவும், இதனைச் சுற்றி குடியிருப்புகள், வணிக வளாகங்கள் மற்றும் பொழுதுபோக்கிற்கென பெரிய பூங்காங்கள் ஆகியவையும் அமைக்கப்பட உள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இக்கோபுரத்தில் 234 மாடிகள் அமைக்கப்பட உள்ளன எனவும் இவற்றில் சுமார் 7000 பேர் வசிக்க முடியும் எனவும் இத்திட்டத்தின் மூலம் சுமார் 43,000 பேர் வேலை வாய்ப்பை பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சீனா

## கணவன் கையைப் பிடிக்காததால் மனைவி மரணம்



சீனாவின் ஷாங்காய் மாகாணம், சுஹோ நகரை சேர்ந்த சர்க்கஸ் கலைஞர்கள் சுஹொங்க் மவ்மவ் , மற்றும் சன் மவ்மவ் .

கணவன் மனைவியான இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர். இந்நிலையில் அந்நகரின் ஹொவ்ஹா என்ற கிராமத்தில் கடந்த சனிக்கிழமை சர்க்கஸ் நிகழ்ச்சியொன்று நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்ச்சியில் சுஹொங்க் மற்றும் சன் சர்க்கஸ் கலைஞர் தம்பதி பங்கேற்று தங்கள் திறனை வெளிப்படுத்தினர். இந்நிகழ்ச்சியைக் காண நூற்றுக்கணக்கானோர் குவிந்திருந்தனர்.

இதன்போது அந்தரத்தில் தொங்கியபடி சுஹொங்க் மற்றும் அவரது மனைவி சன் ஆகியோர் சர்க்கஸ் செய்துகொண்டிருந்தனர்.

சுஹொங்க் தனது உடலில் கயிறை கட்டிய படியும் அவரது மனைவி சன் எந்த வித பாதுகாப்பு உபகரணங்களும் இல்லாமல் சர்க்கஸ் செய்துகொண்டிருந்தனர்.

அப்போது, சற்று தடுமாறிய சுஹொங்க் தனது மனைவியின் கையைப் பிடிக்கத் தவறிவிட்டார்.

இதனால், 32 அடி உயரத்தில் இருந்து சன் கீழே விழுந்தார். இந்த விபத்து சுற்றி இருந்த பார்வையாளர்கள் முன் அரங்கேறியது. இந்த சம்பவத்தில் பல அடி உயரத்தில் இருந்து கீழே விழுந்த சர்க்கஸ் கலைஞர் சன் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கபட்டார்.

சீனா

## 29 பேரின் உயிரைப் பறித்த மருத்துவமனை



சீன தலைநகர் பெய்ஜிங்கில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் ஏற்பட்ட கோர தீவிபத்தில் சிக்கி 29 பேர் உடல் கருதி உயிரிழந்தனர்.

இம்மருத்துவமனையில் சுமார் 100 நோயாளிகள் சிகிச்சை பெற்று வந்துள்ளனர். இந்நிலையில், நேற்றுமுன்தினம்(19) நண்பகல் 1 மணி அளவில் அங்கு திடீரென தீப்பிடித்துள்ளது.

சில நிமிடங்களிலேயே இத்தீயானது மருத்துவமனை முழுவதும் வேகமாக பரவியது. இதனால் பதறிப்போன நோயாளிகளும், மருத்துவமனை ஊழியர்களும் செய்வதறியாது அங்கிருந்து தப்பிக்கும் முயற்சியில் ஈடுபட்டனர்.

சிலர் ஜன்னல் வழியாக மாடியில் இருந்து குதித்தும், வெளியே இருக்கும் ஏசியில் அமர்ந்தும் தீயில் இருந்து தப்பிக்க முயன்றனர். இதன்போது பலர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர், 71 நோயாளிகளை மீட்டு வேறு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அதே சமயம் இக்கோர விபத்தில் சிக்கி 29 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறு இருப்பினும் இத்தீவிபத்துக்கான காரணம் குறித்த தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை.

அமெரிக்கா

## ட்ரெண்டிங் ஆசையில் உயிரை விட்ட சிறுவன்

சமூக வலைத் தளங்களில் ட்ரெண்டிங்கில் வரவேண்டும் என்ற ஆசையில் சிறுவன் ஒருவர் உயிரை விட்ட சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவின் ஒஹாயோ மாகாணத்தைச் சேர்ந்த சிறுவன் ஜஸ்டின் ஸ்டீவென்ஸ். 13 வயதான இச்சிறுவனுக்கு நீண்டகாலமாக டிக்டொக் டிரென்டாக வேண்டும் என்ற ஆசை இருந்துள்ளது.

அதே சமயம் டிக்டொக்கில் தற்போது "சளிக்கு பயன்படுத்தப்படும் ஒருவித மருந்தினை அதிக அளவில் உட்கொண்டு ஒருவிதமான மயக்க நிலையை யார் அடைகிறார்கள் என்ற சவால் டிரென்டாகி வருகின்றது.

இந்த சவாலில் பங்கேற்க விரும்பிய குறித்த சிறுவன், சுமார் 12 இல் இருந்து 14 மாத்திரைகளை விழுங்கியுள்ளான். இதை அவனது நண்பர்கள் வீடியோ எடுத்துள்ளனர்.

அதிக டோஸ் அவனது உடலுக்கு சேராமல் பாதிப்பு ஏற்பட்ட நிலையில், மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சைக்கு அனுமதித்தனர்.

அவுஸ்திரேலியா

## அவுஸ்திரேலியாவில் தோன்றிய 'நிங்கலூ'



சூர்ய குடும்பத்தில், பூமிக்கும் சூரியனுக்கும் இடையே சந்திரன் வரும்போது சூரிய கிரகணம் நிகழ்கிறது. முழு கிரகணம், பகுதி கிரகணம், வளைய கிரகணம், வளைய மற்றும் முழு கிரகணம் இணைந்த கலப்பின கிரகணம் என நான்கு வகையான சூரிய கிரகணங்கள் நிகழ்ந்து வருகின்றன.

அதன்படி, 400 ஆண்டுகளுக்குப் பிறகு மிகவும் அரிதான கலப்பின சூரியகிரகணமொன்று நேற்றைய தினம் நிகழ்ந்துள்ளது.

இதனை அவுஸ்திரேலியாவின் நிங்கலூ என்ற பகுதியில் முழுமையாக பார்க்க முடியும் என்பதால், இதற்கு நிங்கலூ சூரிய கிரகணம் என பெயரிடப்பட்டுள்ளது.

அமெரிக்க விண்வெளி ஆய்வு மையமான நாசா, தனது யூடியூப் பக்கத்தில் சூரிய கிரகண நிகழ்வுகளை நேரலையாக ஒளிபரப்பி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன்ஸ் லீக்: அரையிறுதியில் சிற்றி, மிலன்



ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் சம்பியன்ஸ் லீக் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் சிற்றி, இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் ஆகியன தகுதி பெற்றுள்ளன.

தமது மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 3-0 என்ற கோல் கணக்கில் வென்ற சிற்றி, ஜேர்மனிய புண்டெலிஸ்கா கழகமான பயேர்ண் மியூனிச்சின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்தியதைத் தொடர்ந்து 4-1 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங்க் பிறோட் ஹலான்ட் பெற்றதோடு, மியூனிச் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோஷுவா கிம்மிச் பெற்றிருந்தார்.

இந்நிலையில், போர்த்துக்கல் கழகமான பெய்பிக்காவின் மைதானத்தில் நடைபெற்ற முதலாவது சுற்று காலிறுதிப் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் முன்னிலையிலிருந்த மிலன், தமது மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற இரண்டாவது சுற்றுப் போட்டியை 3-3 என்ற சமப்படுத்தியதையடுத்து 5-3 என்ற மொத்த கோல் கணக்கில் அரையிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

## ஐ.பி.எல்: றோயல்ஸை வென்ற சுப்பர் ஜையன்ட்ஸ்



இந்தியாவின் உள்ளூர் இருபதுக்கு -20 தொடரான இந்தியன் பிறீமியர் லீக் தொடரில் (ஐ.பி.எல்), ஜெய்ப்பூரில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ராஜஸ்தான் றோயல்ஸுடனான போட்டியில் லக்னோ சுப்பர் ஜையன்ட்ஸ் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: றோயல்ஸ்

சுப்பர் ஜையன்ட்ஸ்: 154/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 51 (42), லோகேஷ் ராகுல் 39 (32), நிக்கலஸ் பூரான் 29 (20), மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 21 (16) ஓட்டங்கள். பந்துவீச்சு: இரவிச்சந்திரன் அஷ்வின் 2/23 [4], ட்ரெண்ட் போல்ட் 1/16 [4], சந்தீப் ஷர்மா 1/32 [4])

றோயல்ஸ்: 144/6 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: யஷஸ்வி ஜைஸ்வால் 44 (35), ஜொஸ் பட்லர் 40 (41), தேவ்டுட் படிக்கல் 26 (21), றியான் பராக் ஆ.இ 15 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஆவேஷ் கான் 3/25 [4], மார்க்கஸ் ஸ்டொய்னிஸ் 2/28 [4], நவீன்-உல்-ஹக் 0/19 [4], ரவி பிஷ்னோய் 0/25 [4], அமித் மிஷ்ரா 0/15 [2])

போட்டியின் நாயகன்: மார்க்கஸ் ஸ்டொய்னிஸ்

இந்நிலையில், சென்னையில் இன்றிரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் சண்றைசர்ஸ் ஹைதரபாத்தை சென்னை சுப்பர் கிங்ஸ் எதிர்கொள்ளவுள்ளது.

கனடா எல்சன் பூப்பந்தாட்டக் கழகத்தால் கிழக்கு மாகாணத்தில்

## முதல்முறையாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

வி.ரி. சகாதேவராஜா





கனடா எல்சன் பூப்பந்தாட்டக் கழகத்தால் கிழக்கு மாகாணத்தில் முதல்முறையாக விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அம்பாறை மாவட்டத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்நிகழ்வில் கனடாவிலிருந்து வருகை தந்த அ. ஜெயகாந், எல்சன் பூப்பந்தாட்டக் கழகத்தின் அனுசரணையில் இவ்வுபகரணங்களை வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்ட பூப்பந்தாட்ட வீரர்கள் கலந்து கொண்டு விளையாட்டு உபகரணங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து வீரர்களுக்கான பயிற்சி முகாமும் இடம்பெற்றது.


## ஏ.சி மிலனுடன் ஓராண்டு ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட்ட ஜிரூட்




இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான ஏ.சி மிலனின் முன்களவீரரான ஒலிவியர் ஜிரூட், கழகத்துடன் புதிய ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளார்.

அடுத்த பருவகால முடிவு வரையில் கழகத்தில் தொடரும் வரையில் ஓராண்டு ஒப்பந்தத்துக்கு 36 வயதான ஜிரூட் இணங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## றியல் மட்ரிட்டில் தொடரவுள்ள பென்ஸீமா?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான றியல் மட்ரிட்டின் முன்களவீரரான கரிம் பென்ஸீமா, அக்கழகத்துடன் ஓராண்டு ஒப்பந்த நீடிப்பொன்றைக் கைச்சாத்திட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் அடுத்தாண்டு வரையில் மட்ரிட்டில் அக்கழகத்தின் அணித்தலைவரான பென்ஸீமா தொடரவுள்ளார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 21 ஏப்ரல் 2023, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.